மார்ச் 2016
ரூ.10.00

# புதிய ஜனநாயகம்




ஜே.என்.யு மாணவர் போராட்டம் :

# பார்ப்பன பாசிசத்திற்கு பதிலடி!

# ஜே.என்.யு. மாணவர் போராட்டக் காட்சிகள்



அடக்குமுறைக்கு எதிராக ஆவேசம்.



ஜாதவ்பூர் பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களும் கொல்கத்தாவில் நடத்திய பேரணி.


ஜே.என்.யு. மீதான அடக்குமுறைக்கு எதிராக 15,000-க்கும் மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் பங்கேற்ற எதிர்ப்புப் பேரணி.


டெல்லி பாட்டியாலா ஹவுஸ் நீதிமன்றத்தில் ஜே.என்.யு. மாணவரைத் தாக்கும் பா.ஜ.க. எம்.எல்.ஏ. ஓ.பி.சர்மா.


போலீசின் துணையோடு மாணவர்களைத் தாக்கும் காவி வக்கீல்கள்.


கண்ணையா குமார்: இதற்குப் பெயர் போலீசு பாதுகாப்பாம்!

# தேசத்துரோகி யாரெனக் கேட்டால்...

ஏதோ கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவது ஒட்டிக் கொண்டிருக்கும் இந்தியாவின் இறையாண்மையை ஒரேயடியாக முடித்துவிடும் சதித்தனத்தில் இறங்கியிருக்கிறது, மோடி அரசு. மன்மோகன் சிங் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட அணு விபத்து இழப்பீடு சட்டம், இந்தியாவிற்கு அணு உலைகளை விற்கும் ஏகாதிபத்திய நிறுவனங்களை விபத்திற்கும் இழப்பீட்டிற்கும் நேரடியாகப் பொறுப்பாக்காமல், சுற்றி வளைத்து மூக்கைத் தொட்டது. அதாவது, இந்திய அரசு அணு உலையை விற்ற நிறுவனத்துடன் இழப்பீடு குறித்துத் தனியாக ஒப்பந்தம் போட்டிருந்தால் மட்டுமே அவற்றைப் பொறுப்பாக்க முடியும் என அணு உலைகளை விற்கும் பன்னாட்டு நிறுவனங்களைத் தப்ப வைக்கும் நோக்கில் நைச்சியமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது.

இப்படிபட்ட விதி இருப்பதைக்கூட ஏற்றுக்கொள்ள மறுத்துவந்த அமெரிக்க ஏகாதிபத்தியம், அணுவிபத்து இழப்பீடு குறித்த சர்வதேச ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு, அதற்குப் பொருத்தமாக உள்நாட்டு சட்டத்தைத் திருத்த வேண்டும் என இந்திய அரசை நிர்பந்தித்து வந்தது. இது குறித்து அமெரிக்காவுடன் இரகசியப் பேச்சுவார்த்தைகளை நடத்தி வந்த மோடி, ‘‘அணு விபத்துகளுக்கு அணு உலையை விற்கும் நிறுவனங்களைப் பொறுப்பாக்கக் கூடாது’’ எனக் கடுமையான நிபந்தனைகளைக் கொண்ட சர்வதேச ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதாக சர்வதேச அணுசக்தி கழகத்திடம் கடந்த மாதம் ஒப்புக்கொண்டு விட்டது. மன்மோகன் சிங்கின் இழப்பீடு சட்டத்திற்கு எதிராகப் பெருங்கூச்சல் போட்ட பா.ஜ.க.தான், காதும் காதும் வைத்தாற்போல இந்தக் கயமைத்தனத்தை நடத்தி முடித்திருக்கிறது.

அணு உலைகளே கூடாது என நாட்டின் பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் நடந்துவரும் வேளையில், அணு விபத்து ஏற்பட்டால், விபத்திற்குப் பொறுப்பான ஏகாதிபத்திய மற்றும் உள்நாட்டு தரகு முதலாளித்துவ நிறுவனங்களிடம் இந்திய அரசோ மக்களோ இழப்பீடு கேட்கக்கூட முடியாது என்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள மோடி, தேசத்துரோகத்தில் மன்மோகன் சிங் உள்ளிட்ட அனைவரையும் விஞ்சிவிட்டார்.

இதுவும் போதாதென்று, கென்யா நாட்டின் தலைநகர் நைரோபியில் கடந்த ஆண்டு டிசம்பர் 15-ஆம் தேதி முதல் 18-ஆம் தேதிவரை நடைபெற்ற உலக வர்த்தகக் கழகத்தின் பத்தாவது மாநாட்டில் விவசாய மானியம் தொடர்பாக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்திலும் கையெழுத்திட்டிருக்கிறது, மோடி அரசு. அத்தீர்மானம் சில விதிவிலக்குகள் தவிர, உணவுப் பொருட்களுக்கு வழங்கப்படும் ஏற்றுமதி மானியத்தை ஏழை நாடுகள் 2018-ஆம் ஆண்டுக்குள் முற்றிலுமாக ரத்து செய்துவிட வேண்டும்; விவசாயிகளிடமிருந்து உணவுப் பொருட்களைக் கொள்முதல் செய்வது; அவற்றை ரேஷன் கடைகளின் மூலம் விநியோகிப்பது ஆகியவை தொடர்பாக விரைந்து பேச்சுவார்த்தைகள் நடத்தி முடிவுக்கு வர வேண்டும் எனக் கோருகிறது.

ஏற்றுமதி மானியத்தை ரத்து செய்ய வேண்டும் என்ற நிபந்தனையின் நோக்கம், பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் தானியத்தை இந்தியாவின் தலையில் கட்டுவதும், இந்திய விவசாயத்தையும் உணவுத் தற்சார்பையும் அழிப்பதும்தான். பொது விநியோகம், நெல் கொள்முதல் ஆகியவை ஏழைகளின், விவசாயிகளின் வாழ்வாதாரப் பிரச்சினை. அவற்றை ஏகாதிபத்தியங்களின் நிபந்தனைக்கு உட்படுத்துவதென்பது விவசாயத்தையும், மக்களின் உயிரையும் முற்றுமுழுதாகப் பலியிடுவதன்றி வேறல்ல.

இந்திய மக்களின் உணவு உரிமை மட்டுமின்றி, அவர்களின் கல்வியுரிமையும் ஏகாதிபத்தியங்களிடம் அடகு வைக்கப்பட்டிருக்கிறது. காட்ஸ் ஒப்பந்தத்தில் இந்தியக் கல்வித் துறை சேர்க்கப்பட்டிருப்பதை விலக்கிக் கொண்டு, அதிலிருந்து வெளியேற வாய்ப்பிருந்தும், கல்வித் துறையைப் பன்னாட்டு கல்வி வியாபாரிகளுக்குத் திறந்துவிடுவதற்கான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்த ஒப்புக்கொண்டிருக்கிறது, மோடி அரசு.

இப்போது தெரிகிறதா, டில்லி ஜே.என்.யு. மாணவர்கள் மீதான தாக்குதல் தன்னுடைய துரோகத்தை மறைப்பதற்கு மோடி அரசு கட்டவிழ்த்துவிட்டிருக்கும் சதியென்று!

•


புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 31 இதழ்: 5

மார்ச் 2016

உள்நாடு

தனி இதழ்: ரூ. 10.00

ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்

(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு : மு.துரை



தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண் : 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:

puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

# ஜே.என்.யு. மாணவர் போராட்டம்:
# பார்ப்பன பாசிசத்துக்குப் பதிலடி!

*சென்னையில் அம்பேத்கர் - பெரியார் வாசகர் வட்டத்துக்குத் தடை, ரோகித் வெமுலா தற்கொலை ஆகியவற்றைத் தொடர்ந்து ஜே.என்.யு. மாணவர்களை தேசத்துரோகிகளாகச் சித்தரிக்க முயலும் மோடி அரசு, கடும் எதிர்ப்பைச் சந்திக்கிறது. அதன் பார்ப்பன தேசியக் கருத்தாக்கம் அம்பலமாகிப் பல்லிளிக்கிறது.*

**ஜ**வகர்லால் நேரு பல்கலைக்கழக விவகாரத்தில் இப்படியொரு பதிலடி கிடைக்கும் என்று ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனக் கும்பல் எதிர்பார்க்கவில்லை. நாடு முழுவதுமுள்ள உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர்கள், ஆசிரியர்கள், சர்வதேசப் பல்கலைக்கழகங்களின் மாணவர்கள், அறிவுத்துறையினர், பத்திரிகையாளர்கள் ஆகியோரில் தொடங்கி எதிர்க்கட்சிகள் மற்றும் ஜனநாயக சக்திகள் அனைவரிடமிருந்தும் சீறிவரும் கண்டனங்களால் தனிமைப்பட்டிருக்கிறது மோடி அரசு.

ஜே.என்.யு. பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஏ.பி.வி.பி. சங்கத்தின் நிர்வாகிகளே மோடி அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து வெளியேறியிருக்கின்றனர். தனது நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்கு பா.ஜ.க.-வினர் மேற்கொள்ளும் முயற்சிகள், அவர்களுக்கே புதிய சிக்கல்களை உருவாக்கி, ''உடும்பு வேண்டாம், கையை விடு'' என்ற நிலைக்கு அவர்களைத் தள்ளியிருக்கின்றன.

''மோடி என்ற பாசிசக் கோமாளியின் மீது பந்தயம் கட்டியது முட்டாள்தனமோ?'' என்று ஆளும் வர்க்கமே சிந்திக்கும் அளவுக்கு இந்த ஆட்சி சந்தி சிரித்துவிட்டது. மதவெறி அரசியல் மூலம் வாக்குகளைப் பெற முடியாது என்பதால், ''சப் கா சாத், சப் கா விகாஸ்'' (அனைவருடனும் முன்னேற்றம், அனைவருக்குமான முன்னேற்றம்) என்றெல்லாம் மோசடி செய்து மக்களை நம்ப வைத்த மோடி மஸ்தானால் வாக்களித்த எதையும் வரவழைக்க முடியவில்லை.

பொருளாதாரம், வேலைவாய்ப்பு, உள்நாட்டு உற்பத்தி உள்ளிட்ட அனைத்திலும் தோல்வி. மேக் இன் இந்தியா, டிஜிட்டல் இந்தியா, ஸ்டார்ட் அப் இந்தியா, ஸ்டாண்டு அப் இந்தியா என்று புதுப்புது படங்களுக்குப் பூசை போடப்படுகிறதேயொழிய, ஒரு படமும் ரிலீஸ் ஆகவில்லை. ''ஒற்றைச்சாளர முறை, நான்தான் அனைத்தையும் முடிவு செய்வேன்'' என்பன போன்ற சவடால்களால், இந்த அரசுக் கட்டமைவுக்கு அப்பாற்பட்ட மாபெரும் சக்தி போலத் தன்னைக் காட்டிக் கொண்ட மோடியை நம்பிய பன்னாட்டு, இந்நாட்டு பெரு முதலாளிகள் ஏமாந்து விட்டார்கள்.

முதலாளிகளின் நிலை இதுவென்றால், மக்களைப் பற்றிச் சொல்லத் தேவையே இல்லை. அப்பட்டமான மக்கள் விரோதக் கொள்கைகளால் குறுகிய காலத்தில் எல்லாத் தரப்பு மக்களின் வெறுப்பையும் ஈட்டியிருக்கிறார் திருவாளர் மோடி. ''நான் விவசாயிகளின் எதிரி இல்லை, நான் தலித் மக்களின் எதிரி இல்லை, நான் கார்ப்பரேட் கையாள் இல்லை'' என்று ஆட்சிக்கு வந்த ஒரே ஆண்டிற்குள் மக்களுக்குத் தன்னிலை விளக்கம் அளிக்கும் நிலைக்கு ஆளான கேடுகெட்ட ஒரு பிரதமரை மக்கள் முதன்முறையாகப் பார்க்கிறார்கள். ''சுவச் பாரத், யோகாசனம், மன் கி பாத்'' போன்ற சுயவிளம்பர கேலிக்கூத்துகள் அறிமுகப்படுத்தப்பட்ட வேகத்தில் பல்லிளிக்கின்றன.

தான் 56 அங்குல மார்பு கொண்ட ஆண்மகன் என்றும் மன்மோகன் சிங்கிடம் வாலாட்டுவதைப் போல பாகிஸ்தான் தன்னிடம் வாலாட்ட முடியாதென்றும் தேர்தல் பிரச்சாரத்தில் வெறியூட்டிய மோடி, நவாஸ் ஷெரிபைச் சந்தித்து விருந்துண்டு திரும்பிய சூட்டில், பதான்கோட்டில் தாக்குதல் நடக்கிறது. ''56 அங்குல மோடி பிரதமரான பின்னர்

ஜே.என்.யு. மாணவர் போராட்டம்: பார்ப்பன பாசிச கொழுப்புக்கு செருப்படி!



தான் பாக். இராணுவம் 52 முறை எல்லை தாண்டி வந்திருக்கிறது'' என்று மோடியைக் கேலி செய்கிறது ஆம் ஆத்மி கட்சி. எதிரில் இருப்பவர்கள் பேச மாட்டார்கள் என்ற உத்திரவாதம் இருக்கும் மேடைகளிலெல்லாம் பொளந்து கட்டும் மோடி, பத்திரிகையாளர்களையும் நாடாளுமன்றத்தையும் கண்டு நடுங்குகிறார்.

மொத்தத்தில், பொருத்தமான இயக்குநர் மட்டும் இருந்தால், மோடியைக் கதாநாயகனாக வைத்து சாப்ளினின் ''கிரேட் டிக்டேட்டர்'' படத்தையொத்த ஒரு திரைப்படத்தை உருவாக்க முடியும்.

• • •

**ஜே**.என்.யு. மாணவர்கள் மீதான தாக்குதலையும், அதில் சங்கப் பரிவாரத்தினர்காட்டும் வெறித்தனத்தையும் கண்டு, மோடி அரசு மிகவும் வலிமையான நிலையில் இருந்து கொண்டு இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் கருதிவிடக் கூடாது. கல்வி நிறுவனங்கள் முதல் அரசு நிறுவனங்கள் வரையிலான அனைத்தையும் இந்துத்துவமயமாக்குவதும் சமூகத்தைப் பிளவுபடுத்துவதும்தான் மோடி அரசின் நோக்கம் என்ற போதிலும், தங்கள் தோல்வியை மறைக்கும் பொருட்டும், பிரச்சினைகளிலிருந்து திசை திருப்பும் பொருட்டும், மென்மேலும் இத்தகைய நடவடிக்கைகளைச் சார்ந்திருக்கும் நிலைக்கு பாரதிய ஜனதா தள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் காணத்தவறக் கூடாது.

உ.பி.-யில் நாடாளுமன்ற நாற்காலிகளை வெல்வதற்கு ''லவ் ஜிகாத்'' என்ற முஸ்லிம் எதிர்ப்புப் பொய்ப் பிரச்சாரத்தையும், முசாஃபர்நகர் கலவரத்தையும் பயன்படுத்தினர். லவ் ஜிகாத் என்பதே சங்கப் பரிவாரம் திட்டமிட்டு நடத்திய நாடகம் என்பது பின்னர் அம்பலமானது. மாட்டுக் கறியை வைத்து தூண்டப்பட்ட மதவெறி பல முஸ்லிம்களின் உயிரைக் காவு கொண்டது. பின்னர் அக்லக் வீட்டில் இருந்தது ஆட்டுக்கறி தான் என்று அம்பலமானது. இந்து என்ற துருப்புச்சீட்டு செல்லாது என பிகார் தேர்தல் காட்டியது.

அரசியல் சார்பற்றவர்கள் என்று கருதப்படும் இலக்கியவாதிகள், அறிவுத்துறையினர், அறிவியலாளர்கள் என சுமார் 400- க்கும் மேற்பட்டவர்கள் தமது விருதுகளைத் திருப்பிக் கொடுத்தனர். சர்வதேச அளவில் கண்டனங்கள் எழுந்தன. உள்நாட்டில் மட்டுமின்றி, சர்வதேச அளவில் சிரிப்பாய்ச் சிரித்துத் தனிமைப்பட்ட பின்னரும், தங்களது நடவடிக்கைகளை சங்கப் பரிவாரத்தினர் நிறுத்திக் கொள்ளவில்லை. காரணம் அவர்களது பார்ப்பன வெறி என்பது மட்டுமல்ல, அரசியல்ரீதியில் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு அவர்களுக்கு வேறு வழி இல்லை.




ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக ஆசிரியர்கள், தமது மாணவர்கள் மீது ஏவிவிடப்பட்டுள்ள அரசு பயங்கரவாதத்தைக் கண்டித்து துணை வேந்தர் அலுவலகம் முன் நடத்திய ஆர்ப்பாட்டம்.

அறிவியலுக்குப் புறம்பான மூட நம்பிக்கைகளையும், மதவெறி, சாதிவெறி, தேசவெறி பிடித்த கருத்துக்களையும் ஆரோக்கியமான விவாதத்தின் மூலம் மற்றவர்களை ஏற்கச் செய்வது என்பது அவர்களுக்குச் சாத்தியமில்லை. அதனால்தான் வரலாற்று ஆய்வு மையம், பாடத்திட்டக் குழு, திரைப்படக் கல்லூரி, உயர்கல்வி நிறுவனங்கள் போன்றவற்றில் அதிகாரத்தைப் பயன்படுத்தி, தமது ஆட்களைத் திணிக்கிறார்கள். இந்துத்துவ பாசிசத்தைக் கேள்விக்குள்ளாக்கும் நபர்களை வெளியேற்றுகிறார்கள், தாக்குகிறார்கள், கொலை செய்கிறார்கள். தபோல்கர் முதல் வெமுலா வரையிலானோரின் படுகொலைகள் இந்த ரகத்தைச் சேர்ந்தவையே.

ஐ.ஐ.டி. சென்னையில் அம்பேத்கர் - பெரியார் வாசகர் வட்டம் தடை செய்யப்பட்ட விவகாரத்தை எடுத்துக் கொள்வோம். ஐ.ஐ.டி. சென்னை என்பது ஒரு பார்ப்பனக் கோட்டை. இந்துத்துவ சார்பு அமைப்புகள்தான் அங்கே எண்ணிக்கையில் அதிகம். பெரியார்-அம்பேத்கர் வாசகர் வட்டத்தைச் சேர்ந்தவர்கள் அதில் மிகச் சிறுபான்மையினர். எனினும், இந்துத்துவத்தையும் மோடி அரசின் கொள்கைகளையும்

கன்னையா குமாரை விடுதலை செய்யக் கோரி 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் திரண்டு டெல்லியில் நடத்திய பேரணி.





இந்து மதவெறி பாசிச அரசால் வேட்டையாடப்பட்ட ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர்கள்: (இடமிருந்து - மேல் வரிசை) ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர் கன்னையா குமார், துணைத் தலைவர் ஷெஹ்லா ரஷீத், பொதுச் செயலர் ராமா நாகா, மற்றும் உமர் காலித்; (கீழ்வரிசை) ஆனந்த் பிரகாஷ் நாராயணன், அபராஜிதா, அஷுடோஷ் குமார் யாதவ், அநிர்பன் பட்டாச்சார்யா.

அம்பலப்படுத்தி அவர்கள் நடத்திய கூட்டங்களைப் பார்ப்பனக் கும்பலால் கருத்துரீதியாக எதிர்கொண்டு முறியடிக்க இயலவில்லை. காரணம், கருத்துரீதியாக அவர்கள் தரப்பில் நியாயம் இல்லை. அவ்வாறு கருத்துப் போராட்டம் நடத்தும் ஜனநாயக வழிமுறையில் அவர்களுக்கு நம்பிக்கையும் இல்லை. எனவேதான் ஸ்மிருதி இரானிக்கு மொட்டைக் கடிதம் போட்டு நடவடிக்கை எடுக்க வைத்தார்கள்.

''மற்றவர்களுக்குக் கல்வியை மறுத்ததன் மூலம் தமது அறிவின் மேன்மையை நிலைநாட்டிக் கொண்ட பார்ப்பனர்கள்'' என்று இந்தியாவைப் பற்றிய ஆய்வில் குறிப்பிடுவார் கார்ல் மார்க்ஸ். அது ஐ.ஐ.டி. பார்ப்பனர்களுக்கும் பொருந்தும். மற்றவர்கள் பேச அனுமதிக்கப்படாத, எதிர்க்கேள்விகள் எழுப்பப்படாத மேடைகளில் சண்டப்பிரசண்டம் செய்யும் மோடிக்கும் பொருந்தும்.

ரோகித் வெமுலா விசயத்தில் நடந்ததென்ன? சென்னை ஐ.ஐ.டி.-யைப் போலவே ஐதராபாத் பல்கலைக்கழகமும் பார்ப்பன, ஆதிக்க சாதியினரைப் பெரும்பான்மையாக கொண்ட இடம்தான். ''முசாஃபர்நகர் பாக்கி ஹை'' என்ற ஆவணப்படத்தையோ, யாகுப் மேமன் தூக்கிலிடப்பட்டதைக் கண்டிக்கும் அம்பேத்கர் மாணவர் அமைப்பின் கருத்தையோ பார்ப்பனக் கும்பல் தனது வாதத்திறமை மூலம் எதிர் கொள்ளவில்லை. மாறாக, தமது அதிகாரத்தின் துணை கொண்டு ரோகித் வெமுலாவைக் கொன்றார்கள். தற்போது ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் நடந்து கொண்டிருப்பது இவற்றின் தொடர்ச்சி.

• • •

**ஜே**.என்.யு. என்பது 1969-இல் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகம். அறிவுத்துறையினரை நிறுவனமயமாக்கும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்ட மற்ற உயர்கல்வி நிறுவனங்களைப் போன்றதுதான் இதுவும் என்றாலும், மற்ற உயர்கல்வி நிறுவனங்களில் இல்லாத அளவிலான கருத்துச் சுதந்திரமும் விவாத சுதந்திரமும் அங்கே அனுமதிக்கப்பட்டிருப்பதும், இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலிருந்துமான மாணவர்களைத் திட்டமிட்டே சேர்க்கின்ற ஒரு நிறுவனமாக இருப்பதும் இதன் தனித்தன்மைகள். அது மட்டுமல்ல, மாணவர் சங்கத்தினருக்கு மற்ற பல்கலைக்கழகங்களில் இல்லாத பல உரிமைகளும் நிர்வாகத்தில் பங்கும் உள்ளது.

ஆண்டுதோறும் அங்கே மாணவர் சங்கத் தேர்தல் முறையாக நடக்கிறது என்ற போதிலும், அதில் ஆர்.எஸ்.எஸ். சார்பு ஏ.பி.வி.பி. அமைப்பு வெற்றி பெற முடிந்ததில்லை. பாரதிய ஜனதா தோன்றுவதற்கு முன்னர் டெல்லியில் ஜனசங்கம் செல்வாக்கு செலுத்திய காலத்திலும், வட இந்தியா முழுவதும் இந்து மதவெறிக்கு ஆட்படுத்தப்பட்ட அயோத்தி

கலவர காலத்திலும், மத்தியில் வாஜ்பாயி ஆட்சி செலுத்திய காலத்திலும், தற்போது மோடி வெற்றி பெற்றிருக்கும் இந்தக் காலத்திலும், அதாவது எந்தக் காலத்திலும் காவிக்கோமாளிகள் அங்கே வெற்றி பெற்றதில்லை.

தங்களுடைய மதவெறிக் கருத்துக்களை பல்கலைக்கழக வளாகத்தினுள்பிரச்சாரம்செய்ய அவர்களுக்கு முழு சுதந்திரம் இருந்த போதிலும், இந்துத்துவக் கருத்துகள் அங்கே செல்வாக்கு பெற முடிந்ததில்லை. அதேபோல, முஸ்லிம் மாணவர்கள் அங்கே கணிசமாக இருந்தபோதிலும் அவர்கள் இசுலாமிய மாணவர் அமைப்பில் சேருவதில்லை. அறிவியல் கண்ணோட்டமும் ஜனநாயக விழுமியங்களும் செல்வாக்கு செலுத்தும் இடங்களில் ஆர்.எஸ்.எஸ். மட்டுமல்ல, எந்த மதவாத அமைப்பும் காலூன்ற இயலாது என்பதற்கு ஜே.என்.யு. ஒரு எடுத்துக்காட்டு.



''நான் விவசாயிகளின் எதிரி இல்லை, நான் தலித் மக்களின் எதிரி இல்லை, நான் கார்ப்பரேட் கையாள் இல்லை'' என்று ஆட்சிக்கு வந்த ஒரே ஆண்டிற்குள் மக்களுக்கு தன்னிலை விளக்கம் அளிக்கும் நிலைக்கு ஆளான கேடுகெட்ட ஒரு பிரதமரை மக்கள் முதன்முறையாகப் பார்க்கிறார்கள்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்துக்கள் பிளாஸ்டிக் சர்ஜரியைக் கண்டுபிடித்து விட்டனர் என்பதற்கு விநாயகரே சான்று என்று பேசும் அறிவாளியை பிரதமராக வைத்திருக்கும் கட்சி, ரோமில்லா தாபர் போன்ற வரலாற்று ஆய்வாளர்களிடம் பயின்ற மாணவர்களைத் தன் பக்கம் எப்படி ஈர்க்க முடியும்? அவசரநிலைக் காலத்தில் இந்திராவை உள்ளே வராதே என்று தடுத்து நிறுத்திய பாரம்பரியம் கொண்ட மாணவர்களை, சீக்கியர் படுகொலையின்போது சீக்கிய மக்களை வளாகத்தினுள் அடைக்கலம் தந்து பாதுகாத்த மாணவர்களை, பாபர் மசூதி இடிப்பை எதிர்த்துக் குரல் கொடுத்த மாணவர்களை சங்கப் பரிவாரம் எப்படித் தன் பக்கம் ஈர்க்க முடியும்? முடியாது என்பது பா.ஜ.க.வினருக்கும் தெரியும்.


ஜே.என்.யு.வில் பயின்று வெளியே வருபவர்கள் அதிகார வர்க்கம் முதல் ஊடகங்கள் வரை பல்வேறு இடங்களிலும் பொறுப்புகளிலும் அமர்ந்திருப்பதும், ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனக் கும்பலால் கட்டோடு வெறுக்கப்படும் ''மதச் சார்பின்மை, கடவுள் மறுப்பு, கலப்பு பொருளாதாரம், ஜனநாயகம்'' என்பன போன்ற கோட்பாடுகளின் செல்வாக்கிற்கு ஆட்பட்டவர்களாகவும் இருப்பதும், இந்தப் பல்கலைக்கழகம் தலைநகரமான டில்லியிலேயே இருப்பதும் பார்ப்பனப் பாசிசக் கும்பலுக்கு சகிக்க முடியாததாக உள்ளது.

எனவே, பாபர் மசூதியை இடித்ததைப் போல, ஜே.என்.யு.வை மூடுவது என்பதுதான் அவர்களது நோக்கம். அந்த இலக்கை நோக்கியதுதான் மாணவர்கள் மீது தொடுக்கப்பட்டிருக்கும் இந்தத் தாக்குதல்.

• • •

**ஜே.**என்.யு.வில் சில மாணவர்கள் அப்சல் குருவுக்கு நினைவுநாள் கடைப்பிடித்ததாகவும், அதில் ''இந்தியாவைத் துண்டு துண்டாக்குவோம், பாகிஸ்தான் ஜிந்தாபாத்'' என்ற முழக்கங்கள் எழுப்பப்பட்டதாகவும், இத்தகைய தேசவிரோத நடவடிக்கைகள் உள்ளே நடந்ததற்கு வீடியோ ஆதாரங்கள் இருப்பதாகவும் சொல்லி சில வீடியோ காட்சிகளை ''ஜீ டிவி'' என்றஆங்கிலத்தொலைக்காட்சிஒளிபரப்பியது.பிறகு அதே வீடியோவை, ''டைம்ஸ் நௌ'', ''நியூஸ் எக்ஸ்'' போன்ற ஆங்கிலத் தொலைக்காட்சிகளும் இவர்களைச் சார்ந்த இந்தி தொலைக்காட்சிகளும் தொடர்ச்

ஆர்.எஸ்.எஸ். இந்து தேசியத்தை மறுத்து நிற்கும் மாணவர்களை வன்மத்தோடு வேட்டையாடும் தாக்குதலில் தளபதியாகச் செயல்படும் உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், மனித வளத்துறை மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிருதி இராணி மற்றும் டெல்லி போலீசு ஆணையர் பாஸி.







சியாகக் காட்டி, ஜே.என்.யு. மாணவர்கள் அனைவரும் தேச விரோதிகள் என்பதைப் போன்றதொரு பொதுக்கருத்தை திட்டமிட்டே உருவாக்கின.

உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், ஜே.என்.யு. மாணவர்களுக்கு டிவிட்டர் மூலமாக லஸ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகளுடன் தொடர்பு இருப்பதாக குற்றம் சாட்டினார். அவர் பேசி முடிப்பதற்குள் அந்த டிவிட்டர்கணக்கேபோலியானதென்று அம்பலமானது. இருப்பினும் ஜே.என்.யு. வளாகத்துக்குள் போலீசு நுழைந்தது; விடுதிகளுக்குள் புகுந்து சோதனை போட்டது. குறிப்பிட்ட சில மாணவர்களின் பட்டியலை வைத்துக்கொண்டு அவர்களைத் தேடியது. கன்னையா குமாரைக் கைது செய்தது. கன்னையா குமார் மட்டுமின்றி, டெல்லி பல்கலைக் கழகத்தின் முன்னாள் பேராசிரியர் கிலானியும் அப்சல் குரு நினைவு நாளை ஒட்டிப் பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தியதற்காக தேசத்துரோக வழக்கில் கைது செய்யப்பட்டார். அடுத்த சில நாட்களுக்குள்ளேயே ஆர்.எஸ்.எஸ். அரங்கேற்றிய மோசடி நாடகம் அம்பலமாகத் தொடங்கிவிட்டது.

அப்சல் குரு நினைவு நாள் கூட்டம் என்பது தற்போது முதன் முறையாக நடப்பது அல்ல. கடந்த 3 ஆண்டுகளாக ஜே.என்.யு.வில் மட்டுமல்ல, டில்லியிலும் நடந்து வருகிறது. நாடாளுமன்றத் தாக்குதல் சம்பவத்தில் அப்சல் குரு மீது போடப்பட்டது பொய்வழக்கு என்ற குற்றச்சாட்டில் தொடங்கி அந்த தீர்ப்பே அநீதியானது என்பது வரையிலான விமரிசனங்களை இப்போது நாம் விவரிக்கப் போவதில்லை. ஜே.என்.யு.வில் முறையாக அனுமதி பெற்று நடைபெறவிருந்த அப்சல் குரு நினைவு நாள் கூட்டத்திற்கு, ஏ.பி.வி.பி. தூண்டுதலின் பேரில் பல்கலைக்கழக நிர்வாகம் கடைசி நேரத்தில் தடை விதித்தது. தடையைக் கண்டித்துப் பல்கலைக்கழக வளாகத்துக்குள்ளேயே நடத்தப்பட்ட பேரணியின் மீது ஏ.பி.வி.பி. காலிகள் தாக்குதல் தொடுத்து ஆத்திரமூட்டியிருக்கின்றனர். ஆத்திரமடைந்த காஷ்மீர் மாணவர்கள் எதிர் முழக்கம் எழுப்பியிருக்கின்றனர்.

இதையெல்லாம் ஏ.பி.வி.பி.யினர் முன்கூட்டியே திட்டமிட்டிருக்கிறார்கள் என்பதும், ஜீ தொலைக் காட்சியினரையும் அழைத்து வந்து படம் பிடித்திருக்கிறார்கள் என்பதும் பின்னர் தெரியவந்திருக்கிறது.



''பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்துக்கள் பிளாஸ்டிக் சர்ஜரியைக் கண்டு பிடித்து விட்டனர் என்பதற்கு விநாயகரே சான்று'' என்று பேசும் அறிவாளியை பிரதமராக வைத்திருக்கும் கட்சி, ரோமில்லா தாபர் போன்ற வரலாற்று ஆய்வாளர்களிடம் பயின்ற ஜே.என்.யு. மாணவர்களைத் தன் பக்கம் எப்படி ஈர்க்க முடியும்?

அது மட்டுமல்ல; ஏ.பி.வி.பி.யினரின் ரவுடித்தனத்தைக் கண்டித்து பிப்ரவரி 11-ஆம் தேதியன்று ஜே.என்.யு. மாணவர் சங்கத் தலைவர் கன்னையா குமார் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தையும் இவர்கள் படம் பிடித்திருக்கின்றனர். கன்னையா குமாரின் ஆர்ப்பாட்ட வீடியோவில், ''பாகிஸ்தான் வாழ்க, இந்தியாவைத் துண்டாக்குவோம்'' என்பன போன்ற முழக்கங்களை ஒட்ட வைத்து தயாரிக்கப்பட்ட மோசடி வீடியோவைத்தான் ஜீ டிவி, டைம்ஸ் நெள உள்ளிட்ட தொலைக்காட்சிகள் ஒளிபரப்பியிருக்கின்றன.

இந்த மோசடியை இந்தியா டுடே தொலைக்காட்சி ஆதாரபூர்வமாக அம்பலப்படுத்திய பின்னரும், வெட்கமே இல்லாமல் மோடி அரசு மாணவர்கள் மீதான தனது தாக்குதலை தொடர்ந்தது. நாத்திகரும் இடதுசாரிக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டவருமான உமர் காலித் என்ற மாணவருக்கு ''ஜெய்ஷ்-இ-முகம்மது'' என்ற இசுலாமியத் தீவிரவாத அமைப்புடன் தொடர்பு இருப்பதாகவும் அவரும் ராம் நாகா, அநிர்பன் போன்ற சில மாணவர்களும் தலைமறைவாகி விட்டதாகவும் வதந்தியைப் பரப்பியது. இவற்றை மறுதலித்து உமர், அநிர்பன் ஆகிய மாணவர்கள் தாமாக முன்வந்து கைதாகினர்.

மோடி அரசின் எல்லாப் பொய்களும் உடனுக்குடன் அம்பலமானது மட்டுமல்ல, வேண்டுமென்றே இந்தப் பொய்களைப் பரப்பி, ஜே.என்.யு. மாணவர்களுக்கெதிரான பொதுக்கருத்தை உருவாக்கிய தொலைக்காட்சி சானல்களும் சேர்ந்து அம்பலமாகின. ஜீ டிவி பத்திரிகையாளர் விசுவ தீபக் இதனை எதிர்த்து அறிக்கை விட்டு தனது வேலையை ராஜினாமா செய்தார். இந்து வெறி மோடி அரசுக்கு கைக்கூலி வேலை செய்த அர்னாப் கோஸ்வாமி உள்ளிட்டோரை சக பத்திரிகையாளர்கள் (மரபை மீறி) முதன் முறையாகப் பெயர் சொல்லி அம்பலப்படுத்தினர். ''நானும் தேசத்துரோகி''தான் என்று கட்டுரை எழுதினார் பிரபல பத்திரைகையாளர் ராஜ்தீப் சர்தேசாய். மொத்தத்தில் மோடி அரசுடன் சேர்ந்து அதற்குத் துணை போன ஊடகங்களும் அம்மணமாகின.

ஆட்டுக்கறியை மாட்டுக்கறி என்று கூறி தாத்ரியில் அக்லக் என்ற முதியவரைக் கொலை செய்தது போல, லவ் ஜிகாத் என்று பொய் பிரச்சாரம் செய்து உ.பி.யில் கலவரத்தை தூண்டியது போல, மாலேகானில் குண்டு

வைத்து விட்டு இசுலாமியர்கள் மீது பழி போட்டதைப் போல, நள்ளிரவில் பாபர் மசூதிக்குள் ராமன் சிலையைத் கொண்டு வந்து வைத்ததைப் போல - ஜே.என்.யு. விவகாரமும் ஒரு திருட்டுத்தனம்தான் என்பது முற்று முழுதாக அம்பலமாகிவிட்டது.

• • •



ஜே.என்.யு. மாணவர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து மார்ச் 3, 2016 அன்று சென்னை - வள்ளுவர் கோட்டம் அருகே நடந்த புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியின் ஆர்ப்பாட்டம்.

**கை**யும் களவுமாகப் பிடிபட்ட கிரிமினல்களுக்கு வீராவேசமாகப் பேசுவது ஒன்றுதானே தற்காப்பு? நாடாளுமன்றத்தில் சாமியாடினார் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி. அவரது பேச்சின் வீடியோவை வெளியிட்டு, ''சத்யமேவ ஜெயதே'' என்று டிவிட்டரில் அதனைப் பாராட்டியிருந்தார் மோடி. ஆனால், இரானி பேசியவை அனைத்தும் ''அசத்தியம்'' என்பதை ரோகித் வெமுலாவின் தாயார் முதல் இரானி மேற்கோள் காட்டிப் பேசிய அனைவரும் அடுத்த நாளே அம்பலப்படுத்தினர்.

'ஆதாரபூர்வமாக' ஜே.என்.யு.வை அம்பலப்படுத்த முயன்ற ராஜஸ்தான் பா.ஜ.க. எம்.எல்.ஏ. ஞானதேவ், இரவு 8 மணிக்கு மேல் ஜே.என்.யு.-வில் மாணவ, மாணவிகள் நிர்வாண நடனம் ஆடுவதாகவும், 50,000 எலும்புகள், 3,000 ஆணுறைகள், 10,000 சிகரெட் துண்டுகள் அன்றாடம் குப்பையில் வீசப்படுவதாகவும் புள்ளி விவரங்களை வெளியிட்டார். பார்ப்பன பாசிஸ்டுகளின் 'அறிவுத்திறன்' கண்டு உலகமே வயிறு வலிக்கச் சிரித்தது.

மொத்தத்தில் 'புனிதம்' என்றும் 'விவாதத்துக்கு அப்பாற்பட்டது' என்றும் பூச்சாண்டி காட்டிக் கொண்டிருந்த அனைத்து விசயங்களையும், புரட்டி எடுப்பதற்கான வாய்ப்பைத் தமது சொந்த நடவடிக்கைகளின் மூலம் அனைவருக்கும் வழங்கியிருக்கிறது பார்ப்பன பாசிசக் கும்பல்.

அரசியல் சட்டம், ஒருமைப்பாடு , தேசபக்தி, நீதிமன்றத் தீர்ப்பு போன்ற விவகாரங்களில் இதுநாள் வரை எச்சரிக்கையாக சட்ட வரம்புக்குள் நின்று பேசிக்கொண்டிருந்த அறிவுத்துறையினரும் இந்துவெறி அரசியலுக்குப் பயந்து அடக்கி வாசித்துக் கொண்டிருந்த எதிர்க்கட்சிகளும் தமது வரம்பைத் தாண்டி வந்து பார்ப்பன பாசிசத்தை விமரிசிக்கின்றனர்.

'தேசியம்' என்ற சொல்லுக்குள் இந்து தேசியத்தை ஒளித்து வைத்துக் கொண்டு, மாணவர்களை 'தேசத் துரோகிகள்' என்று மிரட்டியது ஆர்.எஸ்.எஸ். ''எது தேசம், எது தேசத்துரோகம்?'', ''தேசியத்தை வரையறுப்பதற்கு நீ யார்?'' என்று பல கோணங்களில் கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

''மகிஷாசுரனுக்கு நினைவுநாள் கொண்டாடுகிறார்கள் ஜே.என்.யு. மாணவர்கள்'' என்ற ஸ்மிருதி இரானியின் குற்றச்சாட்டுக்கு, ''ஆம், அப்படித்தான் கொண்டாடுவோம். மகிஷாசுரன் மட்டுமல்ல, இராவணனுக்கும் மகாபலிக்கும் கொண்டாடுவோம். இது அசுர மரபு'' என்று பல முனைகளிலிருந்து பதிலடி வருகிறது.

முன்னாள் இராணுவ அதிகாரிகளை வைத்து மாணவர்களுக்கு எதிராக தேசபக்தக் கூச்சல் எழுப்புகிறது சங்கப் பரிவாரம். ''தேசபக்திக்கு ராணுவம்தான் அத்தாரிட்டியா, இந்த நாட்டின் விவசாயி, தொழிலாளி,




**கன்னையா குமாரின் ஆர்ப்பாட்ட வீடியோவில் ''பாகிஸ்தான் வாழ்க, இந்தியாவைத் துண்டாக்குவோம்'' என்பன போன்ற முழக்கங்களை ஒட்டவைத்து தயாரிக்கப்பட்ட மோசடி வீடியோவைத்தான் ஜீ டிவி, டைம்ஸ் நெள உள்ளிட்ட தொலைக்காட்சிகள் ஒளிபரப்பியிருக்கின்றன.**



ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர்கள் மீதான பார்ப்பன பாசிசத்தின் தாக்குதலைக் கண்டித்து நூற்றுக்கணக்கான கல்லூரி மாணவர்களைத் திரட்டிப் புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி சென்னையில் நடத்திய பெருந்திரள் ஆர்ப்பாட்டம்.

மாணவர்கள் போன்ற நாங்களெல்லாம் தேசமில்லையா?'' என்று திருப்பியடிக்கிறார்கள் மாணவர்கள்.

''உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பை விமரிசிப்பதும் அரசியல் சட்டத்தை விமரிசிப்பதும் எப்படி தேசத் துரோகமாகும்? ஏன் விமரிசிக்கக் கூடாது?'' ''திராவிட நாடு கோரிக்கையை முன்வைத்து நாடாளு மன்றத்திலேயே அண்ணாதுரை பேசவில்லையா?'', ''காஷ்மீருக்கு விடுதலை என்ற கருத்தை முன்வைப்பது எப்படித் தவறாகும்?'' என்பன போன்ற கேள்விகள் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சி விவாதங்களிலும் இன்று எழுப்பப்படுகின்றன.

இந்து மதவாத, தேசியப் பூச்சாண்டிகளைத் தாக்கி தகர்ப்பதற்கான வாசலை எதிரிகளே திறந்து விட்டிருக்கின்றனர். ''தேசியம், ஒருமைப்பாடு, முதலாளித்துவ கருத்து சுதந்திரம், ஜனநாயகம், சுதந்திரமான ஊடகங்கள், சட்டத்தின் ஆட்சி'' போன்ற கருத்துகள் அனைத்தையும் பாட்டாளி வர்க்க அரசியல் பார்வையிலிருந்து தெளிவுபடுத்தவும், அம்பலப்படுத்துவதற்குமான வாய்ப்பை எதிரிகளே வழங்கியிருக்கின்றனர்.

ஜே.என்.யு. வளாகத்தில் நிலவும் கருத்து சுதந்திரம் உள்ளிட்ட உரிமைகள் காரணமாக மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய ஜனநாயக மயக்கத்தை அந்தப் பல்கலைக்கழகத்தின் கதவைத் தட்டும் பாசிசக் காட்டுமிராண்டிகள் கலைத்து விட்டனர். ''காஷ்மீர், மணிப்பூர், சட்டிஸ்கரிலிருந்து உங்களைப் பிரித்துப் பாதுகாக்கின்ற சுவர் ஏதும் இல்லை'' என்ற உண்மையை பாசிஸ்டுகள் அவர்களுக்கு உணர்த்துகின்றனர்.

ஜே.என்.யு. அராஜகம் நீதிமன்றத்தின் மீதான அறிவுத்துறையினரின் மயக்கத்தையும் கலைத்து விட்டது. நீதிமன்ற வளாகத்துக்குள்ளும், நீதிமன்றத்துக்குள்ளும் கன்னையா குமார் தாக்கப்பட்டார். உச்சநீதி மன்ற எச்சரிக்கைக்குப் பின்னரும் மீண்டும் கன்னையா தாக்கப்பட்டார். உச்சநீதி மன்றம் அனுப்பிய மூத்த வழக்கறிஞர் குழு தாக்கப்பட்டது. தாக்கிய ரவுடி வக்கீல்கள் வெற்றி ஊர்வலம் நடத்தினர். ''நாங்கள்தான் தாக்கினோம்'' என்று வீடியோவில் பேட்டி கொடுத்தனர். இவ்வழக்கு விசாரிக்கப்படும்போது உச்சநீதி மன்றத்துக் குள்ளேயே காவி வக்கீல்கள் கலகக் குரல் எழுப்பினர்.

இத்தனைக்குப் பிறகும், ''தனது அதிகாரம் செல்லுபடியாகாத கிழட்டு நாட்டாமையைப் போல'' அமர்ந்திருக்கிறது உச்சநீதி மன்றம். ''சர்தார்ஜி ஜோக்குகளைத் தடை செய்வது குறித்த பொதுநல வழக்கை உடனே விசாரணைக்கு எடுத்துக் கொள்கிறது உச்சநீதி மன்றம். ஆனால், நீதித்துறையையே அச்சுறுத்தும் இந்த நடவடிக்கைகள், சர்தார்ஜி விவகாரத்தை விட முக்கியமானவை என்று நீதிபதிகளுக்குப் புரியவில்லை போலும்!'' என்று மூத்த வழக்கறிஞர்கள் வெளிப்படையாக நீதிபதிகளை விமரிசிக்கிறார்கள்.

பொதுக்கருத்தின் நிர்ப்பந்தம் காரணமாக டில்லி உயர்நீதி மன்றம் கன்னையாவுக்கு நிபந்தனைப் பிணை வழங்கியுள்ள போதிலும், தேச பக்தி, கருத்து சுதந்திரம் போன்றவை பற்றி அத்தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துகள் பார்ப்பன பாசிசத்தின் கருத்துகளை அடியொற்றி இருக்கின்றன. மொத்தத்தில், அதிகாரத்தில் அமர்ந்திருக்கும் பார்ப்பன பாசிஸ்டுகள், தங்களை அம்பலப்படுத்திக் கொள்ளும் போக்கில், இந்த கட்டமைப்பின் எல்லா உறுப்புகளையும் அம்பலப்படுத்தி வருகிறார்கள்.

அத்வானி, ஜோஷி உள்ளிட்ட அனைவரையும் வீழ்த்தி மோடி பிரதமர் நாற்காலியை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த தருணத்தில், 'காரவன்' என்ற இணைய இதழ் ஒரு கட்டுரை வெளியிட்டிருந்தது. குஜராத்தைச் சேர்ந்த சங்கப் பரிவாரத்தின் மூத்த உறுப்பினர் ஒருவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டதாக அக்கட்டுரை கூறுகிறது. ''நாங்கள் என்ன செய்வது, சிவலிங்கத்தின் தலையில் உட்கார்ந்து விட்டது இந்தத் தேள். கையால் எடுத்துப் போடவும் முடியாது. செருப்பால் அடிக்கவும் முடியாது'' என்றாராம் அந்த முதியவர்.

அடிபடுவதற்கு வாட்டமான இடத்தில் இருக்கிறது தேள். நமக்கென்ன தயக்கம், செருப்பை எடுப்பதற்கு!

● மருதையன்.


# “லவ் ஜிகாத்”
## திரைக்கதை, வசனம், டைரக்‌ஷன்
# ஆர்.எஸ்.எஸ்.

*முசுலீம் இளைஞர்கள் இந்துப் பெண்களை மதம் மாற்றுவதற்காக, அவர்களை மயக்கி மணம் செய்து கொள்கிறார்கள் என்று நாடு தழுவிய அளவில் ஆர்.எஸ்.எஸ். நடத்திவரும் பிரச்சாரம் பொய்யானது என்பதை அந்தப் பொய்யர்களின் வாயிலிருந்தே வரவழைத்து அந்த வீடியோக்களை வெளியிட்டிருக்கின்றன குலைல், கோப்ரா போஸ்ட் இணைய இதழ்கள்.*

**க**டந்த நாடாளுமன்றத் தேர்தலுக்குச் சற்று முன்னதாக, ஆர்.எஸ்.எஸ். இந்து மதவெறிக் கும்பல் ஜாட் சாதிவெறியைத் தூண்டிவிட்டு உத்திரப்பிரதேசத்தின் முசாஃபர்நகர் மற்றும் ஷாம்லி மாவட்டங்களில்ஏழை முசுலீம்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிட்ட கலவரத்தில் நாற்பதுக்கும் மேற்பட்ட முசுலீம்கள் கொல்லப்பட்டனர். பல்லாயிரக்கணக்கான முசுலீம் குடும்பங்கள் அதுவரை தாம் வாழ்ந்துவந்த கிராமங்களிலிருந்து துரத்தப்பட்டு, சொந்த மாநிலத்திலேயே அகதிகளாக்கப்பட்டனர். தேர்தலை மனதில் வைத்து நடத்தப்பட்ட இந்தக் கலவரம் உ.பி.யின் மேற்கு மாவட்டங்களில் ஜாட் சாதியினருக்கும் முசுலீம்களுக்கும் இடையே அதுவரை நிலவிவந்தசமூகநல்லிணக்கத்தை உடைத்துப் போட்டு, ஆழமான பிளவை ஏற்படுத்தியது.

முசுலீம் இளைஞனான ஷாநவாஸ், ஜாட் சாதியைச் சேர்ந்த சச்சினின் சகோதரியைக் காதலிக்கிறான் என்று, பாலியல் தொந்திரவு செய்கிறான் என்று ஷாநவாஸையும் சச்சினின் சகோதரியையும் தொடர்புபடுத்தி பரப்பபட்ட வதந்திகளைப் பயன்படுத்திக் கொண்டு, ஜாட் சாதிவெறியைத் தூண்டிவிட்டு இந்தக் கலவரத்தை நடத்தி முடித்தது, ஆர்.எஸ்.எஸ். ஷாநவாஸ் ஜாட் சாதிவெறியர்களால் கொல்லப்பட, பதிலுக்கு ஜாட் சாதியைச் சேர்ந்த சச்சின், கவுரவ் என்ற இரு இளைஞர்கள் முசுலீம் கும்பலால் கொல்லப்பட்டனர். தனிப்பட்ட கொலை, அடிதடியாக முடிந்துபோயிருக்க வேண்டிய பிரச்சினையொன்றை, முசுலீம் இளைஞர்களால் ஜாட் சாதி பெண்களுக்கு ஆபத்து என ஆர்.எஸ்.எஸ். ஊதிப் பெருக்கி, இதனை இன்னொரு முசுலீம் பயங்கரவாத நடவடிக்கையாக,“லவ் ஜிகாத்” என முத்திரை குத்தியது.

இந்தக் கலவரமும், அதனைத் தொடர்ந்து பல்வேறு தளங்களில் நடந்த முசுலீம் எதிர்ப்பு பிரச்சாரமும்தான் உ.பி.யில் பா.ஜ.க. 71 நாடாளுமன்ற இடங்களைக் கைப்பற்றுவதற்கு அடிப்படையாக அமைந்தது. அது மட்டுமின்றி, ஆதிக்க சாதிகளைச் சேர்ந்தவர்களின் வாக்குகளைப் பெறுவதற்கும்,ஆதிக்கசாதிவெறியைமுசுலீம்களுக்குஎதிரான இந்து மதவெறியாக மடை மாற்றுவதற்கும் ராமனை விட, முசுலீம்கள் குண்டு வைக்கிறார்கள் எனப் பீதியூட்டுவதை விட, லவ் ஜிகாத் - முசுலீம் இளைஞர்களால் இந்துப் பெண்களுக்கு ஆபத்து, சாதி கௌரவத்திற்கு ஆபத்து என்ற பிரச்சாரம் - அதிகப்பயன் தருவதையும் கண்டுகொண்டது ஆர்.எஸ்.எஸ்.


லவ் ஜிஹாத் - என ஆர்.எஸ்.எஸ். பரப்பிவரும் பொய்யையும் அவதூறையும் அம்பலப்படுத்தித் திருமணம் செய்து கொண்ட ஷாலு-கலீம் தம்பதியினர்.

இப்படியான சூழ்நிலையில், நாடாளுமன்றத் தேர்தல்களும்முடிந்துஉ.பி.யில் பெரும்பாலான தொகுதிகளை பா.ஜ.க. கைப்பற்றி வெற்றிக் கொண்டாட்டங்களை நடத்திக் கொண்டிருந்த வேளையில்,உ.பி.யின் மீரட் பகுதியிலுள்ள சாரவா கிராமத்தில் வசித்துவரும் ஜாட் சாதியைச் சேர்ந்த ஷாலு என்றஇளம்பெண்,உல்தான் கிராமத்தைச் சேர்ந்த கலீமும் அவரது நண்பர்களும் தன்னைக்கூட்டுப்பாலியல்



முசுலீம்களால் ஜாட் சாதி பெண்களுக்கு ஆபத்து என்ற பொய்யைப் பரப்பிய ஆர்.எஸ்.எஸ்., ஜாட் சாதிவெறியர்களோடு இணைந்துகொண்டு நடத்திய முசாஃபர் நகர் கலவரத்தில் பாதிக்கப்பட்ட முசுலீம் பெண்ணும் குழந்தையும். (கோப்புப் படம்)

பலாத்காரப்படுத்தியதோடு, மதம் மாறுமாறு வலுக்கட்டாயப்படுத்து வதாகவும் குற்றஞ்சுமத்தி போலீசில் புகார் அளித்தார். இந்தப் புகாரின் அடிப்படையில் கலீமும் அவரது ஐந்து நண்பர்களும் கைது செய்யப் பட்டனர்.

ஷாலு-கலீம் விவகாரம் எரிகிற நெருப்பில் எண்ணெயை எடுத்து ஊற்றியது போல ஆனது. உள்ளூர் இந்திப் பத்திரிகைகளும் தொலைக் காட்சிகளும் ஷாலு அளித்த புகாரை யும் கலீம் கைது செய்யப்பட்ட தையும் லவ் ஜிகாத் மிகப் பெரும் அச்சுறுத்தலாக வளர்ந்து வருவ தற்கான ஆதாரங்களாகக் காட்டிப் பீதியூட்டின.இதற்காகவே காத்திருந் ததைப் போல, ''இந்து சகோதரிகள், மகள்கள் பாதுகாப்பு இயக்கம்'' மற்றும் ''மீரட் பாது காப்பு இயக்கம்'' என்ற பெயர்களில் புதிதுபுதிதான இந்து மதவெறி அமைப்புகளை உருவாக்கி, அப்பாவி இந்துப் பெண்களை முசுலீம் காமுகர்களிடம் இருந்து காப்பாற்றக்கோரும் துண்டுப் பிரசுரங்களை விநியோ கித்து, முசுலீம் வெறுப்புப் பிரச்சாரத்தை அடுத்த கட் டத்திற்கு எடுத்துச் சென்றது, ஆர்.எஸ்.எஸ்.

ஷாலு-கலீம் விவகாரம் மேற்கு உ.பி.யில் அடுத்த கலவரத்திற்கு இட்டுச் சென்றுவிடக்கூடிய முறுகல் நிலையைத் தோற்றுவித்த நிலையில், ஷாலு, தான் புகார்கொடுத்த மூன்றாவது மாதத்தில் -கடந்த ஆண்டு அக்டோபர் 2014-இல் உள்ளூர் மாஜிஸ்டிரேட் கோர்ட் டில், கலீம் மீது தான் கொடுத்த புகார் தவறானது என வாக்குமூலம் அளித்ததோடு, தானும் கலீமும் ஒரு வரையொருவர் காதலித்து வந்ததாகவும், இதனை விரும்பாத தனது தந்தை நரேந்தர் தியாகி தன்னை வலுக்கட்டாயப்படுத்தி கலீம் மீது புகார் கொடுக்கச் செய்ததாகவும், இதற்காக உள்ளூர் பா.ஜ.க. பிரமு கர் தனது தந்தைக்குப் பணம் கொடுத்ததாகவும் உண் மையைப் போட்டு உடைத்து, ஆர்.எஸ்.எஸ். கும்ப லின் சதித்தனத்தையும், புளுகுணித்தனத்தையும் அம் பலப்படுத்தினார்.

''எனது பெற்றோர்களின் விருப்பத்திற்கு எதிராக நான் கலீமைத் திருமணம் செய்து கொள்ளும் உறுதி யோடு இருப்பதால், அவர்கள் என்னைக் கொல்லத் துணியக்கூடும்'' என நீதிபதியிடமே வாக்குமூலம் அளித்த அவர், வீட்டைவிட்டு வெளியேறி அரசின் இல்லத்தில் தங்கினார். ஷாலு அளித்த வாக்குமூலத் தின் அடிப்படையில் கலீம் 2015 ஏப்ரலில் பிணை யில் விடப்பட்டு, பின்னர் அலகாபாத் உயர்நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். 2015 டிசம் பரில் ஷாலுவும் கலீமும் திருமணம் செய்துகொண்டு, ஆர்.எஸ்.எஸ். கும்பலின் முகத்தில் கரியைப் பூசினர்.

ஷாலு-கலீம் விவகாரத்தை உள்ளூர் அளவில் இந்து மதவெறிக் கும்பல் நடத்திய தனித்ததொரு சதிச் செயலாகக் கருதி ஒதுக்கித் தள்ளவிட முடியாது. லவ் ஜிகாத் குறித்து கோப்ரா போஸ்ட், குலைல் என்ற இரு இணைய தள இதழ்கள் நடத்திய ''ஆபரேஷன் ஜூலியட்'' என்ற இரகசியப் புலனாய்வில், இந்த நச்சுப் பிரச்சாரம் ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. தலைமை யின் ஆசியோடும், ஒப்புதலோடும் நாடு தழுவிய அளவில் நடைமுறைப்படுத்தப்படும் மற்றொரு இந் துத்துவா திட்டம் என்பது நிரூபணமாகியிருக்கிறது.

கோப்ரா போஸ்ட் இதழைச் சேர்ந்த பத்திரிகை யாளர் சிசுபால் குமாரும், குலைல் இதழைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஷாஸியா நகரும் தம்மை ஜவஹர் லால் நேரு பல்கலைக்கழக மாணவர்கள் என்றும், ஆர்.எஸ்.எஸ். மாணவர் அமைப்பின் ஆதரவாளர் கள் என்றும் காட்டிக்கொண்டு, உ.பி. புதானா சட்டமன்றத் தொகுதியில் பா.ஜ.க வேட்பாள ராகப் போட்டியிட்ட உமேஷ் மாலிக், முசாஃபர் நகர் பா.ஜ.க. எம்.எல்.ஏ சுரேஷ் ராணா, முசாஃபர் நகர் நகராட்சித் தேர்தலில் போட்டியிட்ட சஞ்ஜய் அகர்வால், வி.ஹெச்.பி ஊழியர் ராதே ஷ்யாம், கிருஷ்ண சேனா கட்சியின் நிறுவனர் சிவகுமார் ஷர்மா, கேரளாவில் இருந்து செயல்படும் இந்து ஒற் றுமை மன்றத்தின் தலைவன் ரவீஷ் தந்த்ரி உள்ளிட்ட பலரைச் சந்தித்து, ஏறத்தாழ ஒரு வருட காலம் இந்த இரகசியப் புலனாய்வை நடத்தி, ஆதாரங்களைச் சேகரித்து, அதனைப் பல மணி நேரங்கள் ஓடக்கூடிய காணொளி பதிவுகளாக வெளியிட்டுள்ளனர். இந்து மதவெறியர்கள் இந்த இரகசியப் புலனாய்வில் அளித் திருக்கும் சுயவாக்கு மூலங்கள், ''லவ் ஜிகாத்'' என்ற பெயரில் பதியப்பட்ட வழக்குகள் அனைத்தும் திட் டமிட்ட சதியின் மூலம் நடத்தப்பட்டவை என்பதை அம்பலப்படுத்தியுள்ளன.

முசாஃபர் நகர் பா.ஜ.க எம்.எல்.ஏ சுரேஷ் ராணா, ''சாதாரணமாக நடக்கிற மதமாற்றத் திருமணத்தைக் கலைக்க நாங்கள் இசுலாமிய இளைஞர்கள் மீது பாலியல் வல்லுறவு அல்லது கடத்தல் வழக்கைப் போட வைப்போம். எங்களின் இத்திட்டத்திற்குச் சம்மதிக்க மறுக்கும் இந்து பெண்களை ஏதாவதொரு விதத்தில் ஒப்புக்கொள்ள வைப்போம்; அப்படியும் சம்மதியாமல் முரண்டு பிடிப்பவர்களுக்கு இரண்டு அறை விட்டால் போதும், அப்பெண்கள் அடிக்கு பயந்து உடனே சம்மதித்து விடுவார்கள். பிறகு அவர்களாகவே போலீசு நிலையம் சென்று, கடத்தல் மற்றும் கற்பழிப்பு புகாரைப் பதிவு செய்வார்கள்'' எனத் தங்களது நடவடிக்கைகளைப் பதிவு செய்திருக்கிறான்.

கேரள இந்து ஒற்றுமை மன்றத்தின் தலைவன் ரவீஷ் தந்த்ரி, ''முசுலீம்களைத் திருமணம் செய்து கொண்டு மதம் மாறிய பெண்கள், தமது கணவன்மார்களுடன் இப்பிரச்சினை தொடர்பான வழக்கை சந்திப்பதற்காக நீதிமன்றத்துக்கு வரும்போது, உங்கள் பெற்றோர் தரப்பிற்கு ஆதரவாகப் பேசவேண்டும்; மேலும் உன் கணவனை விட்டுவிட்டு, நாங்கள் சொல்லும் நபரைத் திருமணம் செய்ய வேண்டும்; இல்லையென்றால், நீதிமன்றத்தில் இருந்து வெளியே வரும் பொழுதே கொலை செய்துவிடுவோம்'' என மிரட்டுவோம் எனக் கூறியிருக்கிறான்.

பா.ஜ.க.வின் முசாஃபர்நகர் நகராட்சித் தேர்தலில் போட்டியிட்ட சஞ்ஜய் அகர்வால், ''இசுலாமிய இளைஞர்கள் ''லவ் ஜிகாத்'' என்ற பெயரில் நமது பெண்களைத் தூக்கிச் செல்கிறார்கள்; இந்தத் தெருவில் வசிக்கும் இந்த இந்துப்பெண்ணை குறிப்பிட்ட இசுலாமிய இளைஞன் கடத்திச் சென்றுவிட்டான். அதனால் நாம் லவ் ஜிகாத்திற்கு எதிராகப் போராட வேண்டும் எனத் தேர்தல் கூட்டங்களில் பேசுவதன் மூலம் முசுலீம்கள் மீதான வெறுப்புணர்வை இந்துக்களிடம் விதைப்பேன்'' என வாக்குமூலம் அளித்திருக்கிறான்.

லவ் ஜிகாத் எனும் நச்சுப் பிரச்சாரத்தை இந்தியாவெங்கும் எடுத்துச் செல்வதற்கு ஏற்ப இந்த அமைப்புகளின் வலைப் பின்னல் உ.பி.யின் முசாஃபர் நகர், மீரட்டில் ஆரம்பித்து மேற்கு வங்கம், கர்நாடகத்தின் மங்களூர் மற்றும் கேரளத்தின் காசர்கோடு, எர்ணாகுளம் வரை காணப்படுவதையும்; சித்தாந்த ரீதியாகப் பெண்களின் மனதை மாற்ற ஆலோசனை மையங்கள், ஹெல்ப்லைன்கள் செயல்படுத்தப்படுவதையும் இந்த இரகசியப் புலனாய்வு அம்பலப்படுத்தியிருக்கிறது.

ஆர்.எஸ்.எஸ்.- இன் லவ் ஜிகாத் சதி தமிழகத்தை எட்டிப் பார்க்கவில்லை என்றாலும், அதற்கு இணையான ஒன்றை, நாடகக் காதல் என்ற பெயரில் வன்னியர், கவுண்டர், தேவர் சாதிவெறி அமைப்புகள் தாழ்த்தப்பட்டோருக்கு எதிராக நடத்தி வருகின்றன. உ.பி.யில் ஜாட் சாதிவெறியை முசுலீம் எதிர்ப்பு இந்து மதவெறியாக மாற்றுவதில் வெற்றி கண்டுள்ள ஆர்.எஸ்.எஸ்.-க்குத் தமிழகத்திலும் அதே உத்தியைப் பயன்படுத்தி மதவெறிக் கலவரங்களை உருவாக்குவதற்கு, இந்த நாடகக் காதலும் ஆதிக்க சாதி அமைப்புகளும் அடித்தளமாக அமையும்.



கோப்ரா போஸ்ட், குலைல் இணைய இதழ்கள் நடத்திய இரகசியப் புலனாய்வில் லவ் ஜிஹாத் என்ற போர்வையில் தாங்கள் நடத்திய சதிகளை ஒப்புக்கொண்ட மைய அரசின் விவசாயத் துறை இணை அமைச்சர் சஞ்ஜீவ் பல்யான் (இடது) மற்றும் உ.பி. மாநில பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் சுரேஷ் ராணா.

காலனிய காலக் கட்டத்தில் பசு வதைத் தடுப்பு, போலி சுதந்திரத்திற்குப் பின் பாகிஸ்தான் எதிர்ப்பு, இட ஒதுக்கீடு எதிர்ப்பு, ராமர் கோவில், காஷ்மீர், மாட்டுக் கறி - எனத் தனது இந்துத்துவா திட்டங்களைக் காலச் சூழல்களுக்கு ஏற்ப செயல்படுத்தி வரும் ஆர்.எஸ்.எஸ்.-இன் இன்னொரு மதவெறி பாசிசத் திட்டம்தான் லவ் ஜிகாத். முன்னவற்றைப் போலவே லவ் ஜிகாத்தும் சதிகளும், புளுகுகளும், அரை உண்மைகளும் நிறைந்தது என்பதை கோப்ரா போஸ்ட், குலைல் இணைய இதழ்கள் ஆதாரங்களோடு அம்பலப்படுத்தியிருப்பதைத் தேசிய ஊடகங்களும் போலீசுத்துறையும் மட்டுமல்ல, நீதிமன்றங்களும்கூட ஒரு பொருட்டாகக் கருதாமல் ஒதுக்கித் தள்ளிவிட்டன.

குஜராத் படுகொலை குறித்த தெகல்காவின் புலனாய்விற்கு என்ன கதி நேர்ந்ததோ, அதே நிலை லவ் ஜிகாத் குறித்த இரகசியப் புலனாய்விற்கும் நேரிட்டிருப்பது, இந்த நிறுவனங்கள் ஆர்.எஸ்.எஸ்.இன் பொய்களுக்கும் சதிகளுக்கும் அவதூறுகளுக்கும் தரும் முக்கியத்துவத்தை, விளம்பரத்தை, உண்மைக்கும், நியாயத்திற்கும், பார்ப்பன பாசிசத்திற்கு எதிரான போராட்டத்திற்கும் தருவதில்லை என்பதை மீண்டும் எடுத்துக் காட்டியிருக்கிறது.

● அன்பு

சென்ற இதழின் தொடர்ச்சி

# காட்ஸ் ஒப்பந்தம்:

# அரசுக் கல்வியைத் தூக்கிலிடுகிறார் மோடி!

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு கத்தார் நாட்டுத் தலைநகர் தோகா-வில் நடந்த உ.வ.க.வின் நான்காவது அமைச்சர்கள் மாநாட்டில், ஏழை நாடுகளுக்கு வளர்ச்சியைக் கொண்டு வரப் போவதாகச் சொல்லிக் கொண்டு தோகா வளர்ச்சித் திட்டம் உருவாக்கப்பட்டது.


உண்மையில், இது ஏழை நாடுகளை ஏகாதிபத்தியங்கள் விரித்த வலையில் சிக்க வைக்கும் தந்திரமாகிப் போன நிலையில், உ.வ.க.வில் வர்த்தகத்தோடு சேவைத் துறைகளையும் சேர்க்கும் காட்ஸ் ஒப்பந்தம் இறுதியாக்கப்பட்டது. இதனையடுத்து, முந்தைய காங்கிரசு கூட்டணி அரசு இந்தியக் கல்வித் துறையை காட்ஸ் ஒப்பந்தத்தின் கீழ் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களுக்குத் திறந்துவிடும் முன்மொழிதல்களை உ.வ.க.விடம் அளித்து, அது குறித்த பேச்சுவார்த்தைகளை நடத்தத் தொடங்கியது.

ஆப்பிரிக்க கண்டத்திலுள்ள கென்யா நாட்டின் தலைநகர் நைரோபியில் கடந்த ஆண்டு டிசம்பர் 15 முதல் 19 வரை நடந்த உ.வ.க.வின் பத்தாவது அமைச்சர்கள் மாநாட்டில் கல்வி குறித்த தீர்மானம் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அம்மாநாட்டில் கல்வி குறித்த தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை என்ற போதும், மோடி அரசு கல்வித் துறையை காட்ஸ் பேச்சு வார்த்தைகளிலிருந்து விலக்கிக் கொள்ளவுமில்லை.

பேராசிரியர் அனில் சடகோபால் சென்னை ஐ.ஐ.டி. வளாகத்தில் ஆற்றிய இவ்வுரை நைரோபி மாநாட்டிற்கு முன்னதாக நடைபெற்ற ஒன்றாகும். இதனை மனதிற்கொண்டு வாசகர்கள் இக்கட்டுரையை வாசிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- ஆசிரியர் குழு

*கடந்த 2005-ஆம் ஆண்டில், அன்று ஆட்சியிலிருந்த காங்கிரசு அரசு உலக வர்த்தகக் கழகத்தில் கல்வித் துறை சார்பாக சில முன்மொழிதல்களை வழங்கியது. அவற்றை வருகின்ற டிசம்பர் மாதம் 15-ஆம் தேதி நைரோபியில் நடைபெறும் உலக வர்த்தகக் கழக மாநாட்டிற்கு முன்னதாக இந்தியா திரும்பப் பெறாவிட்டால், அவற்றை இந்தியா இனித் திரும்பப் பெறவே முடியாது; அவற்றை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என நிர்பந்திக்க உலக வர்த்தகக் கழகத்திற்கு உரிமை உண்டு.*



பேராசிரியர்
அனில் சடகோபால்.

*விவசாயிகளுக்கு மூன்றாம் உலக நாடுகள் வழங்கி வரும் மானியங்களை இரத்து செய்ய வேண்டும் என்ற அமெரிக்காவின் முன்மொழிதல்கள் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட தோகா சுற்றுப் பேச்சுவார்த்தையில் ஆரம்பித்து இன்று வரை உலக வர்த்தகக் கழகத்தின் அனைத்துக் கூட்டங்களிலும் இழுபறியாக விவாதிக்கப்படுவதால், இது வரை 2005 முன்மொழிதல்கள் குறித்து இறுதி முடிவு எட்டப்படாமல் இருக்கிறது. ஆனால், வரும் டிசம்பர் 15 கூட்டத்தில் தோகா சுற்றுப் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்தாலும், முடிவடையாவிட்டாலும் உலக வர்த்தகக் கழகத்தில் நிலுவையில் உள்ள அனைத்து முன்மொழிதல்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டவையாக அறிவிக்கப்படும். அவற்றின் மீது அந்தந்த நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*காட்ஸ்-இல் கல்வித்துறையை ஒப்படைக்காமல் இருக்க முடியுமா என்று கேட்டால், நிச்சயமாக முடியும் என்று சொல்வேன். 2003-ஆம் ஆண்டிலேயே ஒட்டுமொத்த ஆப்பிரிக்க யூனியனும் இதற்கு மறுப்பு தெரிவித்துவிட்டன. காட்ஸிடம் கல்வித்துறையை ஒப்படைத்தால், அது ஒட்டுமொத்த ஆப்பிரிக்க நாடுகளின் கல்வியையே சாகடிப்பதற்குச் சமம் எனக் கூறி நிராகரித்துவிட்டன. அது போல, இங்கிலாந்து உட்பட ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அனைத்தும் காட்ஸிடம் கல்வியை ஒப்படைக்க மறுத்துவிட்டன. ஆக, உலக வர்த்தகக் கழகத்தில் தமது நாட்டுக் கல்வித்துறையை ஒப்படைக்க 75-க்கும் மேற்பட்ட நாடுகள் மறுத்துவிட்ட நிலையில், இந்தியா ஒப்படைக்க முன்வந்தது. 2005-ஆம் ஆண்டு உலக வர்த்தகக் கழகத்தில் நமது நாட்டு கல்வியை அடகு வைத்தது, மிகவும் இரகசியமாக, நாடாளுமன்றத்துக்கே கூடத் தெரியாத வண்ணம் திட்டமிட்டு முடிக்கப்பட்டது.*

*மேலும், காட்ஸிடம் கல்வியை ஒப்படைக்கும் விதிகளின் ஒவ்வொரு பிரிவிலும் ஐந்து முதல் ஆறு அம்சங்களுக்கு விதிவிலக்கு அளிக்கும் குறைந்தபட்ச வசதியும் இருந்தது. ஆனால், அவற்றில் எதையும் பயன்படுத்தாமல் முழு சரணடைவையே இந்தியா தேர்ந்தெடுத்துள்ளது. ஆனால், கல்வியை காட்ஸ் உடன் இணைக்கச் சம்மதித்துள்ள சீனா, இதில் பல*

விதிவிலக்குகளைத் திறமையுடன் பயன்படுத்திக் கொண்டது. இதன்படி, சீனா இந்தியாவில் முதலீடு செய்யலாம்; ஆனால், இந்தியா சீனாவில் முதலீடு செய்ய இயலாது.

தந்திரமாக எழுதப்பட்டுள்ள காட்ஸ் ஆவணத்தின் புதிரை விடுவிப்பது சிரமமாயினும், அதன் இரண்டு விதிகளைப் பற்றிக் குறிப்பிடலாம் என நினைக்கிறேன். அதில் ‘‘தேசியத் தன்மையோடு நடத்துதல்’’ எனும் (National Treatment) பிரிவு முக்கியமானது. ‘‘புதிய தாராளவாதத்தின்’’ மொழிப்படி இது அந்தந்த நாடுகளுக்கு ஆதரவாகச் செயல்பட இருக்கும் பிரிவு என நினைத்தால், அது தவறானதாகும். மாறாக, இப்பிரிவு அதற்கு நேரெதிரான அம்சங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. தேசியத் தன்மையோடு நடத்துதல் என்பதன்படி, கல்வி உட்பட அனைத்து சேவைத் துறைகளிலும் அதன் உறுப்பு நாடுகள் புதிதாகத் திட்டம், கொள்கைகளை வகுக்கும் போதோ அல்லது நிதி ஒதுக்கீடு செய்யும் போதோ கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் ‘‘சமமான ஆடுகளத்தை’’ (level playing field) வழங்க வேண்டும். நமது அரசியலமைப்பு அனைத்து மக்களையும் சமத்துவத்தோடு அணுக வேண்டும் என்கிறது. ஆனால், அது நிராகரிக்கப்பட்டுவிட்டது. அதேசமயம், கார்ப்பரேட் துறைகளுக்கு இச்சமத்துவத்தை வழங்க நமது அரசு ஒப்புக் கொண்டுள்ளது. நமது அரசியலமைப்பின் மதிப்பீடுகள் எப்படித் தலைகீழாய் மாறியுள்ளன என்பதை இதன்மூலம் கண்கூடாகப் பார்க்கலாம்.




கென்யாவின் தலைநகர் நைரோபியில் நடந்த உ.வ.க.வின் பத்தாவது அமைச்சர்கள் மாநாட்டில் விவசாய மானியம், கல்வி குறித்து விவாதிப்பதை எதிர்த்து, ‘‘எங்களது உலகம் விற்பனைக்கல்ல’’ என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் கூட்டமைப்பின் சார்பாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம்.

உதாரணமாக, தங்களது நூலகத்தை அனைத்து மாணவர்களுக்கும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்த அல்லது நவீனப்படுத்த சென்னைப் பல்கலைகழகத்திற்கோ அல்லது சென்னை ஐ.ஐ.டி.க்கோ மத்திய அரசு 50 கோடி ரூபாய் கொடுத்ததென்றால், சமமான ஆடுகளத்தை வழங்குதலின்படி அதே தொகையை வெஸ்டிங் ஹவுஸ், மைக்ரோசாஃப்ட், சுசூக்கி போன்ற கார்ப்பரேட்டுகளின் கல்விநிறுவனங்களுக்கும் வழங்க வேண்டும். அதைமீறிச் சமமான ஆடுகளத்தை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வழங்கவில்லையென்றால், மத்திய மற்றும் மாநில அரசின் எந்த கல்வி நிறுவனங்களுக்கும் நிதி உதவியோ அல்லது மானியமோ வழங்கக் கூடாது. இப்படி அனைத்து அரசு கல்வி மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டு வந்த வளர்ச்சி நிதியோ அல்லது பல்கலைக் கழக மானிய நிதியோ நிறுத்தப்பட்டால், அவையனைத்தும் வணிகமயமாக்கலை, இலாபத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறையைப் பின்பற்ற வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும். ஆக, கல்வி நிறுவனங்கள் தனியார்மயமாவதோடு மட்டுமல்லாமல், அனைத்துப் படிப்புகளும் இலாபத்தை முன்வைக்கும் சுயநிதிப் படிப்பாக மாற்றப்படும்.

மற்றொரு பிரிவு, ‘‘உள்நாட்டுக் கட்டுப்பாடு’’ (Domestic regulation). இச்சொற்றொடரை உள்நாட்டில் தொழில் செய்வதற்குக் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கான சுதந்திரம் என மேம்போக்காகப் புரிந்துகொண்டால், அது தவறு. மாறாக, உள்நாட்டில் உருவாக்கப்படும் சட்டம் அல்லது கொள்கைகள் எவ்விதத்திலும் கார்ப்பரேட்டுகளுக்குக் கொடுக்கப்பட்ட சுதந்திரத்தில் மூக்கை நுழைத்து தொந்தரவு செய்வதாக இருக்கக் கூடாது என்கிறது. காட்ஸின் ‘‘வர்த்தகக் கொள்கை பரிசீலனை இயங்குமுறை’’யானது (TPRM - Trade Policy Review Mechanism) அரசின் அனைத்து கொள்கை சார்ந்த முடிவுகளைத் தீவிரமாக கண்காணித்து, எப்பொழுதெல்லாம் அரசு காட்ஸிற்கு எதிராக முடிவுகளை எடுக்கிறதோ அப்பொழுதெல்லாம் எச்சரிக்கும். இவர்கள் நாடாளுமன்றத்தின் வாயிலில் உட்கார்ந்து, அவையின் விவாதங்களை உற்று நோக்கி காட்ஸிற்கு எதிரான கொள்கைகளை நாடாளுமன்றம் வகுக்காதவாறு பார்த்துக் கொள்வார்கள். காட்ஸிற்கு எதிராகச் செயல்பட



வெளிநாட்டு கல்வி நிறுவனங்களை அனுமதிப்பது தொடர்பான மசோதாவை எதிர்த்து அனைத்திந்திய ஜனநாயக மாணவர் அமைப்பின் சார்பாக டெல்லியில் நடத்தப்பட்ட பேரணி. (கோப்புப் படம்)

மாட்டோம் என உறுதியளித்திருப்பதால், அப்படியெல்லாம் நடக்க வாய்ப்பில்லை; மீறி நடந்தால், அதை ஒழுங்குபடுத்த ஐ.ஆர்.ஏ. என்கிற தன்னாட்சி கொண்ட ஒழுங்குமுறை ஆணையம் கடிவாளத்தைப் பிடித்துக்கொள்ளும். இவ்வமைப்பு இந்திய நாடாளுமன்றம் அல்லது அதன் உறுப்பினர்கள் என யாருக்கும் கட்டுபட்டதல்ல. மாறாக, உலக மூலதனம் அல்லது அதன் இந்தியக் கூட்டாளிகளுக்கு மட்டுமே கட்டுபட்டது.

இதன்படி, பல்கலைக்கழக மானியக்குழு, இந்திய மருத்துவக் கவுன்சில், ஏ.ஐ.சி.டி.இ., இந்திய பார் கவுன்சில், தேசிய ஆசிரியர் கல்விக் குழு போன்ற உயர் கல்விக்கான ஒழுங்குமுறை மற்றும் மானியக் குழு உறுப்புகள் அனைத்தும் கலைக்கப்பட்டு, தேசிய உயர்கல்வி ஆராய்ச்சி கவுன்சில் அமைக்கப்படும்.

தற்போது பா.ஜ.க அரசு கொண்டுவர இருக்கும் ஆறு மசோதாக்களும் காட்ஸிற்கு சேவை செய்யும் இலக்குடன் இருப்பவை. இதில் ஐ.ஆர்.ஏ.வை நிறுவுவதும் அடங்கும். இந்திய அரசியலைப்புச் சட்டத்திற்கு வெளியே சட்ட அங்கீகாரத்துடன் செயல்பட இருக்கும் இந்த ஐ.ஆர்.ஏ. மிகவும் அபாயகரமானது.

இப்படி அறிவின் மீது தாக்குதல் நடத்துவது மிகவும் மோசமானதாகும். ஏனெனில், நாம் உலக மூலதனம் உருவாக்கிய காட்ஸிற்கு எதிராக அவர்களின் போர் மண்டலத்திற்குள் இருந்து சண்டையிட்டுக் கொண்டிருக்கிறோம். ஏற்கனவே பொறியில் வசமாக மாட்டிக்கொண்டதால், அங்கிருந்து கொண்டு இது பிரச்சினை அல்லது அது பிரச்சினை என்று கூக்குரலிட்டுக் கொண்டிருக்க முடியாது. ஆனால், தொடர்ச்சியாகப் போராட வேண்டியிருக்கிறது.

தற்போது வரவிருக்கிற புதிய கல்விக்கொள்கை மேற்கூறிய பின்னணியில் இருந்துதான் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒரு சிறிய உதாரணம் போதும், அதுதான் ''திறன்மிகு இந்தியா'' திட்டம். திறமைக்குப் பஞ்சமில்லாத நாட்டில் கொண்டு வரப்படும் திட்டங்களுக்கு இது போன்ற பெயரின் தேவை என்ன? ''இந்தியா உலகின் மிகப்பெரிய திறன் மிகு உழைப்புச் சக்தியாக மாறும்'' எனக் கூறி வரும் மோடி, இதை எப்படிச் சாத்தியப்படுத்தப் போகிறார்? பெரும்பான்மையான இந்தியக் குழந்தைகளைக் கல்வியிலிருந்து விலக்கி வைக்கும் பொருட்டு இது சாத்தியமாகிறது. திறமை என்பது கல்வியின் பிரிக்க முடியாத ஓர் அங்கமாகும், ஆனால், கல்வியிலிருந்து திறனைப் பிரிக்கும் பொழுது அது ''திறன் மிகு உழைப்புச்சக்தி''யாக, மோடியின் புதிய திட்டமாக உருவாகிறது. சாதி மற்றும் சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து வரும் குழந்தைகளை ஐந்தாம் வகுப்பிற்குமேல் செல்லவிடாமல், கல்வியை அவர்களிடமிருந்து பிடுங்கிக் கொண்டு அவர்களைப் பட்டறை வேலை, மின் பழுது பார்க்கும் வேலை அல்லது குறைந்த சம்பளம் கொண்ட ''தூய்மை இந்தியா'' பணிக்குத் தேவைப்படும் திறன்மிகு தொழிலாளர்களை உருவாக்கும் முயற்சியே இத்திட்டம்.

மோடி குறிப்பிடுகிற இது போன்ற ''திறன்மிகு உழைப்புச் சக்திகள்'' மிகவும் அபாயகரமானவை. ஏனெனில், திறன் படைத்த உழைப்பாளிகளுக்குச் சிந்திக்க, வினவ, மறுக்க அல்லது வாதிடக் கூடிய வழிமுறை குறித்துத் தெரிந்திருக்க வேண்டும். ஆனால், அறிவியல்பூர்வமற்ற, கேள்வி கேட்க வழிவகையற்ற கல்வியை மட்டுமே இவர்கள் பெறப்போவதால், எக்கேள்விக்கும் இடம் கொடுக்காத, கூழைக் கும்பிடு போடும் ஏகாதிபத்தியத்திற்குத் தேவையான திறனை மட்டுமே இவர்கள் பெற்றிருப்பார்கள். அதேபோல, உங்களைப் போன்ற பலதுறைகளில் சிறந்து விளங்கும் அறிவாளிகளும் அவர்களுக்குத் தேவை. ஆனால், ''சிலிகான் வேலி'' போன்ற அவர்களின் ராஜாங்கத்தில் கேள்வியே கேட்காத, எல்லாவற்றிற்கும் வளைந்து போகக் கூடிய அவர்களின் ''கலாச்சார நெளிவு சுளிவு'' தெரிந்த அடிமைகள் மட்டுமே பல இலட்சம் ரூபாய் சம்பளத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

மிகப்பெரிய காங்கிரசைக் கண்டுகூட பயப்படாத பிரிட்டிஷ் அரசாங்கம் பகத் சிங் உள்ளிட்ட 12 பேரைப் பார்த்துதான் பயந்தது. அதேபோல, சிறிய அம்பேத்கர்-பெரியார் படிப்பு வட்டத்தின் செயல்பாடுகள் ஒட்டுமொத்த ஐ.ஐ.டி. நிர்வாகம் மற்றும் மத்திய மனித வளத் துறைக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக மாறியது. ஆகையால், நபர்களின் எண்ணிக்கை ஒன்றும் பெரிதில்லை; மாறாக, மக்களின் விடுதலைக்குப் போராடத் தேவையான விருப்பமும் துணிவும் முக்கியமானது.

வகுப்புவாதம் ஏகாதிபத்தியத்தின் ஓர் அங்கம். இந்த சமூகத்தைப் பிளவுபடுத்துவதன் மூலம் உலக



அரசுக் கல்லூரியில் சேருவதற்குப் பெரும் எண்ணிக்கையில் காத்திருக்கும் பெற்றோர் மற்றும் மாணவர்கள். (கோப்புப் படம்)

மூலதனம் தனக்கு எதிராகப் போராடவிடாமல் உழைக்கும் மக்களைத் தடுக்கிறது. சாதி, மத வகுப்புவாதக் கலவரங்களின் மூலம் பன்முகத் தாக்குதல்களைநடத்திஇந்தியாவைப்பிரிப்பதால்,அனைவரும் சேர்ந்து போராட வேண்டிய போராட்டத்தில் மக்களைப் பிரித்தாளும் சூழ்ச்சியைச் செய்கிறது. ஆகையால், சங்கப் பரிவாரங்கள் அனைத்தும் உலக மூலதனத்தின் அடியாள் என்பதை எளிதில் அறியலாம்.

டிசம்பர்மாதம்,நைரோபியில்தோகாசுற்றுப்பேச்சுவார்த்தை முடிவதற்குள் நாம் உயர்கல்வியை காட்ஸிலிருந்து விடுவிக்க வேண்டும். தோகா சுற்றுப் பேச்சுவார்த்தை வெற்றியடைந்தாலும், தோல்வியுற்றாலும் உலகமூலதனம்மேலுமொருபுதியஉத்தியைத்தயாரித்துள்ளது. நைரோபி கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அம்சங்கள் காட்ஸின் மூலம் நிறைவேற்றப்படும், ஏற்றுக்கொள்ளாத அம்சங்கள் ''டிசா'' (TiSA -Trade in Services Aggreement) என்கிற பொறியின் மூலம் நிறைவேறும். டிசா-வின்படி தோகா சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு தடங்கல் ஏற்பட்டால், உலகம் முழுதும் கடுமையான நிதி நெருக்கடி ஏற்பட்டு மூலதனம் வீழ்ச்சியடைய வாய்ப்புள்ளது. இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதால், அமெரிக்க மற்றும் ஐரோப்பிய யூனியனின் பரிந்துரைப்படி விசுவாச நாடுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களின் மூலம் காட்ஸை விடக் கடுமையான டிசா அமல்படுத்தப்படும்.

பாகிஸ்தான் மற்றும் தைவானை உள்ளடக்கிய 45-க்கும் மேற்பட்ட நாடுகள் டிசா என்ற புதிய அடிமை சாசனத்தில் கையொப்பமிட இருக்கின்றன. சமீபத்தில் இதன் அபாயங்களை விக்கிலீக்ஸ் வெளியிட்டதால்தான், இதைப் பற்றி ஓரளவிற்கேனும் அறிந்து கொள்ள முடிகிறது. டிசா அமல் படுத்தப்பட்டு ஐந்தாண்டுகள் முடியும்வரைஇதன்அம்சங்களை வெளியுலகிற்குத் தெரியப்படுத்தக் கூடாது என்கிற முன்நிபந்தனையுடன்தான் இந்த ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. டிசா -வைப் பற்றி நாடாளுமன்றம், அதன்உறுப்பினர்கள், எதிர்க்கட்சியினர், நீதித் துறையினர், ஊடகங்கள் யாரும் பேச முடியாது; அந்த அளவிற்கு முற்றிலும் இரகசியமாகவும், ஜனநாயகமற்ற முறையிலும், மக்களுக்கு அபாயகரமானதாகவும் டிசா விளங்கும். பிறகு டிசா-வில் கைச்சாத்திட்ட நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து அதை உலக வர்த்தகக் கழகத்திடம் ஒப்படைக்க முன்வருவார்கள். இதற்கு முன்னுதாரணமாக டி.டி.ஐ.பி.யில் (TTIP Transatlantic Trade and Investment Partnership) முன்மொழிந்துள்ள அம்சங்கள் பலவற்றை உலக வர்த்தகக் கழகம் ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தும் சூழல் உள்ளது.

இறுதியாகச் சொல்வதென்றால், இன்றைக்கு இந்தியாவில் குறைந்த பட்சம் 400 அரசு உதவி பெறும் பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன; அரசின் நிதி உதவியால் இயங்கும் கல்லூரிகள் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்டவை உள்ளன; தரம் வாய்ந்த பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், ஐ.ஐ.டி., ஐ.ஐ.எஸ்.சி., ஐ.ஐ.ஐ.டி., போன்றவை உள்ளன. இவையனைத்தும் இந்தியக் குடிமக்களுக்கு உரியதாகும். இக்கல்விப் புலங்களில் பணியாற்றுபவர்கள் அனைவரும் மௌனம் சாதிக்கிறார்கள்.

இவர்களின் மௌனம் கலைக்கப்பட்டு, குறைந்தபட்சம் 10 சதவீதத்தினராவது நமக்கு இழைக்கப்பட்ட அல்லது இழைக்கப்படவிருக்கும் அநீதிக்கு எதிராகக் குரலெழுப்பினால் போதும், சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் இந்தியாவின் வல்லமை படைத்த எஜமானர்கள் தங்களது நிகழ்ச்சி நிரலை மீள்பார்வை செய்ய முன்வருவார்கள்; அதன்பிறகு இச்செய்தி வாஷிங்டன் டி.சி. மற்றும் உலக வர்த்தகக் கழகம், உலக வங்கியின் தலைமையகமான நியூயார்க்கிற்குத் தெரியவரும். ஆப்பிரிக்க யூனியன் காட்ஸை நிராகரிக்க முடியுமென்றால், இந்தியாவால் ஏன் முடியாது? கண்டிப்பாக முடியும். நமது ஒட்டுமொத்த உயர்கல்வியும் விலை போவதை எப்பாடுபட்டாவது காப்பாற்றுவோம்.

(முற்றும்)


# “மூடு டாஸ்மாக்கை!”

## மக்கள் அதிகாரத்தின் திருச்சி மாநாடு

*''மூடு டாஸ்மாக்கை!'' என்ற முழக்கம் தமிழ் சமூகத்தின் உள்ளக்கிடக்கை என்பதை பல்லாயிரக்கணக்கான மக்களின் பங்கேற்பு நிரூபித்துக் காட்டியது.*

**க**டந்த சில மாதங்களாகவே ஜெயலலிதா அரசினை அச்சுறுத்தி வரும் ''மூடு டாஸ்மாக்கை'' என்ற மக்கள் அதிகாரம் அமைப்பின் முழக்கமானது, கோடிக்கணக்கான தமிழக மக்களின் உள்ளக்கிடக்கை என்பதை நிரூபிக்கும் வண்ணம் அமைந்திருந்தது பிப்ரவரி 14-ஆம் தேதியன்று திருச்சியில் நடைபெற்ற மக்கள் அதிகாரம் அமைப்பின் சிறப்பு மாநாட்டில் கூடிய மக்கள் திரள்.

சசி பெருமாள் மரணம், அதனைத் தொடர்ந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தன்னெழுச்சியாக நடைபெற்ற டாஸ்மாக் எதிர்ப்பு போராட்டங்கள், சென்னை பச்சையப்பன் கல்லூரி, விருத்தாசலம், கோவை, வேதாரண்யம், தருமபுரி உள்ளிட்ட பல இடங்களில் டாஸ்மாக் கடைகளின் மீது மக்கள் நடத்திய தாக்குதல்கள், மேலப்பாளையூர் டாஸ்மாக் கடை அடைப்பு என அடுத்தடுத்து நடைபெற்ற போராட்டங்கள் தமிழக அரசியலின் நிகழ்ச்சி நிரலில் இப்பிரச்சினையை முதல் இடத்தில் வைத்திருந்தன.



மாநாட்டைத் தொடங்கி வைத்து உரையாற்றிய மக்கள் அதிகாரம் மாநில ஒருங்கிணைப்புக் குழுவைச் சேர்ந்த தோழர் காளியப்பன்.

தொடர்ந்து டாஸ்மாக் எதிர்ப்புப் பாடலுக்காக ஜெ. அரசு, ம.க.இ.க. தோழர் கோவன் மீதும் வினவு தளத்தின் மீதும் தேசத்துரோக வழக்கு போட்டதும், சிறை வைத்ததும் ஜெயாவின் மீதான மக்களின் வெறுப்பை அதிகரிக்கச் செய்தது மட்டுமின்றி, மூடு டாஸ்மாக்கை என்ற மக்கள் அதிகாரம் அமைப்பின் முழக்கத்தையும் மேலும்மேலும் மக்களிடம் செல்வாக்குப் பெறச் செய்திருந்தது. சட்டமன்றத் தேர்தல் வரவிருப்பதை ஒட்டி, கூட்டணி பேரத்துக்காக ஓட்டுக்கட்சிகள் ஒருவருக்கொருவர் ''வெயிட்'' காட்டிக் கொள்ளும் பொருட்டு நடத்தும் குவார்ட்டர் - பிரியாணி மாநாடுகளுக்கு மத்தியில், மக்கள் அதிகாரம் நடத்திய ''மூடு டாஸ்மாக்கை'' சிறப்பு மாநாடு எல்லா விதங்களிலும் தனித்து நின்றது.

• • •

மாநாட்டைத் தொடங்கி வைத்துத் தலைமையுரையாற்றிய தோழர் காளியப்பன், மக்கள்அதிகாரம்அமைப்பின் தேவையையும்அதன்நோக்கத்தையும் எளிய எடுத்துக்காட்டுகளுடன் சுருக்கமாக விளக்கினார். மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யக் கூட வக்கில்லாத இந்த அரசு, பொதுச் சொத்துகளையும் இயற்கை வளங்களையும் சூறையாடுவதில் முன் நிற்பதையும், அதிகார வர்க்கமும் போலீசும் மக்களுக்கு எதிரான அடியாட்படையாக வெளிப்படையாகவே செயல்படுவதையும் அம்பலப்படுத்தினார்.

''தமிழகத்தில் உள்ள முந்நூறுக்கும் மேற்பட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகளில் எத்தனை பேர் யோக்கியன் என்று கேட்டால், ஒரேயொரு சகாயத்தைக் காட்டுகிறார்கள். இன்னொருவர் உமாசங்கர்; அவரை காணவே இல்லை. இதுதான் அதிகார வர்க்கத்தின் யோக்கியதை. என் மகன் தண்டனையிலிருந்து தப்பிக்க நான் 25 கோடி ரூபாய் செலவு செய்தேன் என்று நடிகர் சல்மான் கானின் தந்தை பகிரங்கமாகக் கூறுகிறார். இது நீதித்துறையின் யோக்கியதை. இந்தியாவில் நுகரப்படும் மதுவில் ஐந்தில் ஒரு பங்கு தமிழகத்தில்தான் குடிக்கப்படுகிறது. இது தமிழ்ச் சமூகத்தின் யோக்கியதை. எதையும் சகித்துக் கொள்கின்ற, சுயமரியாதையற்ற அடிமைகளாகத் தமிழக மக்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். டாஸ்மாக்கை மூட முடியுமா, முடியாதா என்பதல்ல, முடிந்தே தீர வேண்டும். இந்த அரசுக் கட்டமைப்புக்கு வெளியே நின்று போராடுவதன் மூலம்தான் இதனைச் சாதிக்க முடியும். அத்தகையதொரு போராட்டத்தின் துவக்கம்தான் இந்த மாநாடு'' என்று தனது தொடக்கவுரையில் குறிப்பிட்டார்.

முதல் பேச்சாளராக நேருரையைத் துவங்கிய ஆனந்தி அம்மாள், தான் அடக்கம் செய்த 2500 அநாதைப் பிணங்களில் குடிகாரர்களின் பிணங்கள்தான் அதிகம் என்று கூறியதுடன், 300 பிணங்கள் டாஸ்மாக் கடைகளின் வாசலிலேயே கிடந்தவை என்றும் குறிப்பிட்டு, பிரச்சினையின் பரிமாணத்தை உணர்த்தினார். குடித்து விட்டால் ஏழும் தெரிவதில்லை, எழுபதும் தெரிவதில்லை என்று கூறி, சமீபத்தில் புதன்சந்தை என்ற ஊரில் 70 வயது

மூதாட்டியை நான்கு குடிகாரர்கள் சேர்ந்து வல்லுறவுக்கு ஆளாக்கியிருக் கிறார்கள் என்ற செய்தியை எடுத்துக் காட்டினார். குடியினால் மட்டும் 20 லட்சம் பெண்கள் விதவைகள் ஆகி யிருக்கிறார்கள் என்ற புள்ளி விவரத் தைச் சொன்னது மட்டுமின்றி, குடி காரக் கணவனின் சித்திரவதையைப் பொறுக்க மாட்டாமல், கணவன் சாக மாட்டானா என்று கோயிலுக்குச் சென்று வேண்டும் நிலைக்கு பெண் கள் தள்ளப்பட்டிருக்கும் பரிதாப நிலையையும் விளக்கினார். டாஸ் மாக்கை மூடினால் கள்ளச் சாராயம் பெருத்துவிடும் என்று சொல்கிறார் கள்; ஆம்புலன்சுக்கு 108 என்று போன் நம்பர் கொடுத்தது போல, கள்ளச் சாராயம் விற்பதைக் கண்டால் இந்த நம்பருக்கு போன் செய்யுங்கள் என்று சொல்லி, போன் போட்டவு டன் போலீசு வந்து பிடித்துவிட்டால் கள்ளச் சாராயம் எப்படி இருக்கும் என்று ஒரு பெண் இதற்குப் பதிலடி கொடுத்ததாகச் சொல்லி, அந்த வாதமே மோசடியா னது என்று அம்பலப்படுத்தினார் ஆனந்தி.



மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்குவதை அறிவித்த ரெட்டிப்பாளையத்தைச் சேர்ந்த ஜான் பீட்டர்-கலா குழுவினரின் தப்பாட்டம்.

அடுத்து உரையாற்ற வந்த நாகராஜ் திருப்பூரைச் சேர்ந்த தொழிலாளி. ''500 ரூபாய் சம்பாரிச்சு 50 ரூபாய்தான் பொண்டாட்டியிடம் கொடுக்கிறான் என்று குடிகாரர்கள் பற்றி ஆனந்தி அம்மாள் சொன் னார். நான் அந்த 50 ரூபாய் கூடக் கொடுத்ததில்லை. குழந்தைக்குப் பால் இல்லைன்னு பத்து ரூவா கேட் டால் எரிந்து விழுந்திருக்கிறேன். பொண்டாட்டிக்கு ஒரு முழம் பூ வாங்கித் தந்ததில்லை. சம்பாரிக்கும் மொத்தக் காசையும் குடித்தே அழிச்சிருக்கேன்.

இவன் திருந்த மாட்டான். நாம் போய்ச் சேர வேண்டியதுதான்னு முடிவு பண்ணி என் பொண டாட்டி மண்ணெண்ணையை ஊத்தி தீவைச்சிகிட்டா. காப்பாத்துங்க, காப்பாத்துங்கன்னு கதறல் கேட்டு, எழுந்து அவ மேல தண்ணி ஊத்துறதுக்குள்ள அவள் என்னை பிடிச்சி கிட்டா. எனக்கும் உடம்பு பூரா தீக்காயம். அவ செத்துட்டாங்கிறதே மூணு மாசத் துக்குப் பிறகுதான் எனக்குச் சொன்னாங்க. இப்போ எனக்கு கை-கால் எல்லாம் வெந்து போச்சு. செத்து டலாமான்னு இருக்கு. செத்தா என் மூணு புள்ளங் களும் அநாதையாயிடும். ஒயின் ஷாப்புல எத்தனை இளைஞர்கள் நிக்கிறாங்க. அதப்பாத்தாலே எனக்கு பதறுது. கடையை மூடணும், மூடியே ஆகணும். என் நிலைமை யாருக்கும் வரக்கூடாது'' என்று நாகராஜ் பேசி முடிக்கும்போது திரண்டிருந்த மக்கள் கூட்டம் கண் கலங்கியது. உணர்ச்சிப்பெருக்கில் பலர் முழக் கமிட்டனர்.

''டாஸ்மாக்கை மூடு!'' சிறப்பு மாநாட்டிற்காகத் தமிழகமெங்கும் நடந்த பல்வேறு வகையான பிரச்சாரங்களின் ஒரு பகுதியாக கும்பகோணத்தில் நடந்த தெருமுனைக் கூட்டத்தில் உரை யாற்றும் பள்ளிச் சிறுமி.



நாகராஜைத் தொடர்ந்து பேச வந்த டேவிட் ராஜ் ஒரு விளையாட்டு வீரர். குமரி மாவட்டம் ஆத்தூரைச் சேர்ந்த வர். வாள்வீச்சுப் போட்டியில் தேசிய சாம்பியன் பட்டத்தை வென்றவர். பல்வேறு போட்டிகளில் எட்டு பதக் கங்களை வென்றிருக்கிறார். ஒலிம்பிக் போட்டிக்குச் சென்று வெல்ல வேண்டும் என்பது அவரது கனவு.

முன்னாள் இராணுவ வீரரான தந் தையின் குடிப்பழக்கம் குடும்பத் தைச் சீரழித்ததால், அதைச் சமாளிப் பதற்காகவே தன்னுடைய இராணுவ வேலையை விட்டு ஊருக்கு வந்தவர். சசி பெருமாளுடன் மதுக்கடை எதிர்ப் புப் போராட்டத்தில் பங்கேற்றவர்.

சசி பெருமாள் மறைவுக்குப் பின், தனது ஊரில் பள்ளி, கல்லூரிக்கு அருகில் உள்ள இரண்டு டாஸ்மாக்



டாஸ்மாக் தமிழகத்தைச் சீரழித்திருப்பதை, அதன் கொடூர விளைவுகளைக் குறித்து உரையாற்றிய (இடமிருந்து) உதவும் கைகள் அமைப்பைச் சேர்ந்த ஆனந்தி அம்மாள், கச்சிராயநத்தம் கிராமத்தைச் சேர்ந்த மந்திரிகுமாரி, திருப்பூர்-அனுப்புராப்பாளையத்தைச் சேர்ந்த நாகராஜ், கன்னியாகுமரி-தேமானூரைச் சேர்ந்த வாள் வீச்சு விளையாட்டு வீரர் டேவிட் ராஜ்.

கடைகளை அகற்றுவதற்காகப் போராடியிருக்கிறார். சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தும் பயனில்லாமல், அருகில் உள்ள செல்போன் டவரில் ஏறியிருக்கிறார். இன்னொருபுறம் ஊர் மக்கள் முற்றுகைப் போராட்டம் நடத்தி, ஒரு கடையைப் பூட்டியிருக்கிறார்கள். இரண்டாவது கடைக்கு எதிராகப் போராடிய மக்கள் மீது கொடூரமாகத் தடியடி நடத்தி விரட்டியடித்து விட்டு, டேவிட் ராஜிடம் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறது போலீசு.

கடையை மூடாமல் இறங்க முடியாது என்று டேவிட் ராஜ் உறுதியாக இருக்கவே, கோரிக்கையை ஏற்றுக் கொள்வதாகச் சொல்லி நம்பவைக்கும் பொருட்டு கடைகளை மூடுவது போல நாடகமாடிவிட்டு, டவரிலிருந்து இறங்கிய டேவிட் ராஜை வேனிலேயே வைத்து 6 மணி நேரம் கொடூரமாகத் தாக்கிசித்திரவதை செய்திருக்கிறது போலீசு. சிகிச்சைக்காக 5 மாதங்கள் படுக்கையில் கிடந்திருக்கிறார். சித்திரவதையில் அவரது இடுப்பெலும்பு முறிக்கப்பட்டுவிட்டது. இனி அவரால் போட்டிகளில் பங்கேற்க இயலாது. அவரது விளையாட்டுக் கனவை போலீசு அழித்து விட்டது.

தன்னுடைய வாழ்நாள் கனவு சிதைக்கப்பட்டதை அந்த விளையாட்டு வீரன் எதிர்கொண்ட முறை, மக்கள் அனைவரையும் உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியது. மேடையில் பேசிக் கொண்டிருந்த டேவிட் ராஜ், கையிலிருந்த ஒரு உறையிலிருந்து தான் இதுவரை வாங்கியிருந்த சான்றிதழ்களை எடுத்துக் கிழித்தெறிந்தார்.

''இது என்னுடை 15 ஆண்டு உழைப்புக்கு கிடைத்த பரிசு. இவற்றை நான் அழிக்கப் போகிறேன். எனக்கு இவை தேவையில்லை. எனக்கு தேவை மதுவிலக்கு. என் லட்சியத்தை அவர்கள் அழித்து விட்டார்கள். சாதிக்க வேண்டும் என்று இத்தனை காலம் நான் மைதானத்தில் ஓடிக்கொண்டிருந்தேன். இனி தமிழகம்தான் எனது மைதானம். மதுவிலக்குதான் என் லட்சியம். இந்தப் போராட்டத்தை நம் நாட்டுக்கு செய்யும் கடமையாக எண்ணி நாம் செய்ய வேண்டும். நம் உயிர் போனாலும் கவலைப்படக்கூடாது. தமிழ் நாட்டுக்கு விடுதலை வேண்டும். போராடும் இளைஞர்களை அவர்கள் அழிக்க நினைக்கிறார்கள். அழியமாட்டோம்; எங்களுக்கும் திமிர் உண்டு, உரிமை உண்டு. நீ மூடாவிட்டால், நாங்களே மூடுவோம்'' என்று அவர் பேசி முடித்த போது காவல் பணிக்கு வந்திருந்த பெண் போலீசார் கண் கலங்கினர். சான்றிதழ்களைப் புகைப்படம் எடுத்த பத்திரிகையாளர்கள் கண் கலங்கினர். கூட்டம் உணர்ச்சிப் பெருக்கில் உறைந்து போயிருந்தது.

டாஸ்மாக் சீரழிவுகளைத் தனது மழலை மொழியில் அம்பலப்படுத்திய சிறுமி பாரதி மற்றும் காவ்யாஸ்ரீ.





அடுத்து நேருரையாற்றியவர் கடலூர் மாவட்டத்தில் கைம்பெண்கள் கிராமம் என்று அறியப்படும், கச்சராயநத்தத்திலிருந்து வந்திருந்த மந்திரிகுமாரி.

''எங்க ஊர்ல 105 பேர் இருக்கோம்; விதவைங்க. எங்க ஊர்ல ஒருத்தன் சொல்றான், எங்க பாத்தாலும் சகுனத் தடையா போயிடுச்சாம். விதவையெல்லாம் டெம்போவிலே ஏத்தி குழியில தள்ளணும்கிறான்.

நாங்க செத்தா டாஸ்மாக்க மூடுவாங்கன்னா, சாகிறோம். புருசன் செத்தது ஒருநாளு. நாங்க தெனம் தெனம் செத்துகிட்டு இருக்கிறோம்.

நாங்க வூட்டுக்குள்ள இருந்தா யாரு சோறு போடுவா? ஒரு வேளை சோறு போட வக்கத்த அரசு, புருசனையும்

கொன்னுட்டுது. அம்மா குடுக்குது குடுக்குதுங்கிறாங்க. என்னா குடுக்குது? கால் காணி, அரைக்காணி நிலத்தையும் புடுங்கிகிச்சு. யார் கேட்டா இலவசம்? அரை பவுன் தாலி யார் கேட்டது?

அதென்ன, கள்ளச் சாராயம் வித்தா தப்பு, கெவருமென்டு பகிரங்கமா வித்தா தப்பில்லையா? கள்ளச் சாராயம் குடிச்ச காலத்திலயாவது, பயந்துகிட்டு குடிச்சான். இப்போ போலீச பக்கத்துல வச்சிகிட்டு பப்ளிக்கா குடிக்கிறான். யூனிபார்ம் போட்ட புள்ளையெல்லாம் குடிக்குது. கடை இல்லைன்னா கள்ளச் சாராயத்தைத் தேடிக்கிட்டு போகுமா, இந்தப் புள்ளங்க?'' என்று பொறிந்து தள்ளினார் மந்திரிகுமாரி.

மேலப்பாளையூர் போராட்டத்தில் கலந்து கொண்டு கைதாகி, ஒரு மாதம் சிறையில் இருந்த தெய்வக் கண்ணு பேசப்பேச, பல்லாயிரம் பேர் கொண்ட மாநாட்டின் மக்கள் திரளில் சிறிய சலசலப்புகூட அடங்கி விட்டது. கோடிக்கணக்கான எளிய விவசாயிகளின் கோபம் அவர் வார்த்தைகளில் வெடித்தது.

''என்னய்யா இது அநியாயம். நாம பிச்சை கேட்பது போல இருக்கு. அன்னிக்கி சாராயம் காச்சிறவன ஊரை விட்டு ஒதுக்கி வைப்பான். இன்னிக்கி ஒரு கேடு கெட்ட நாய் கிட்டே நாம கெஞ்சிகிட்டு இருக்கோம்.

எந்த ஒரு காரியத்த எடுத்தாலும் குடிகாரன் பிரச்சினைதான். மகனுக்குப் பொண்ணு பாக்க 5 வருசமா அலையறான் ஒரு அப்பன். எவனும் பொண்ணு குடுக்க மாட்டேங்குறான். குடிக்க மாட்டேன்னு மாப்புள சத்தியம் பண்ணறான். நம்ப முடியல. தகப்பன்காரன் நான். என் பொண்ணுக்கு 25 மாப்பிளை பாத்தேன். அதுல 18 பேர் குடிகாரன். என் தம்பி புள்ள 15 வயசுல சாராயத்த குடிச்சிட்டு ஆக்சிடென்டுல செத்துட்டான். தங்கச்சி 25 வயசுல தாலி அறுத்திடுச்சி.

வெக்கமில்லாம தாலி எடுத்து கொடுக்கிறியே, விளங்குமா? எத்தினி பேரு தாலி அறுத்திருக்கிறே நீ. உனக்கெல்லாம் (ஜெயலலிதாவுக்கு) இது புரியுமா?

இத எதிர்த்துப் போராடினா அந்தப் பையனை டேவிட் ராஜை அப்படி அடிச்சிருக்கிறே. ஒரு வீரனை இப்படி ஆக்கிட்டியே.

மக்களைவிட உனக்கு அதிகாரம் அதிகமா இருக்கா? மக்களுக்குக் கடை வேண்டாம்னா, மூடிற வேண்டியதுதான். எங்க ஊர்ல மூடிட்டோம். தொறக்க முடியுமா உன்னால? தொறந்து பார்!''



டாஸ்மாக் கடைகளும் பார்களும் சட்டவிரோதமாக நடத்தப்படுவதை அம்பலப்படுத்தி உரையாற்றிய தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர்கள் சங்கத்தின் பொதுச்செயலர் த. தனசேகரன்.



''நாங்க பூட்டிய எங்க ஊர் டாஸ்மாக் கடையை மீண்டும் திறக்க முடியுமா?'' என அரசுக்குச் சவால்விட்டு உரையாற்றிய மேலப்பாளையூரைச் சேர்ந்த தெய்வக்கண்ணு.

தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர் சங்கத்தின் செயலாளர் தனசேகரன், ''தமிழ்நாட்டில் உள்ள சரி பாதிக் கடைகளில் உள்ள பார்கள் சட்ட விரோதமானவை. அது மட்டுமல்ல, காலை பத்து முதல் இரவு பத்து வரைதான் கடை திறக்க வேண்டும். ஆனால், எல்லா இடங்களிலும் விடியவிடிய கடை நடக்கிறது. குடிக்கு அடிமையாகி உயிரிழந்த டாஸ்மாக் ஊழியர்களின் எண்ணிக்கை 4000 குடிக்கு அடிமையாகிவிட்டவர்கள், ஒரு குவார்ட்டருக்காககொலையும்செய்யக்கூடியவர்களாக மாறி விடுகிறார்கள். இத்தகைய நபர்களை அன்றாடம் சமாளிப்பவர்கள்நாங்கள்'' என்று கூறி டாஸ்மாக்கை மூட வேண்டும், மாற்று வேலை வாய்ப்பை வழங்க வேண்டும் என்ற தங்களுடைய சங்கத்தின் கோரிக்கையையும் வலியுறுத்தினார்.

டாஸ்மாக் உள்ளிட்ட பிரச்சினைகளில் நீதிமன்றத்தில் நிவாரணம் பெற இயலாது என்பதைப் பல சான்றுகளுடன் நிறுவியது வழக்கறிஞர் வாஞ்சிநாதனின் உரை.

''உண்ணாமலைக்கடையில் டாஸ்மாக்கை மூடச்சொல்லி நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து ஒன்றரை ஆண்டு காலம் ஆன பின்னரும் கடை மூடப்படவில்லை. நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கவும் இல்லை. அதன் விளைவுதான் சசிபெருமாளின் மரணம். கிரானைட்டில் ஒரு லட்சம் கோடிக்கு மேல் கொள்ளை என்று சகாயம் நீதிமன்றத்துக்கு அறிக்கை கொடுத்திருக்கிறார். அதன் விவரங்களை நீதிமன்றம் இதுவரை வெளியிடவில்லை. ஜெ.வின் கூட்டாளி வைகுந்தராசனின் தாதுமணல் கொள்ளையால் கடலோர மீனவர்கள் வாழ்விழந்து புற்றுநோயாலும் பாதிக்கப்படுகிறார்கள் என்று நீதிமன்றத்தில் வழக்கு போட்டால், 108 -க்கு போன் செய் என்று நக்கலாகப் பேசுகிறார் நீதிபதி. 1500 வழக்கறிஞர்கள் பேரணியாகச் சென்று நீதிபதிகளின்ஊழலைஅம்பலமாக்கினோம். வழக்கறிஞர்கள் மீது நடவடிக்கை எடுத்து வெளியேற்றிவிட்டார்கள். இதுதான் நீதித்துறையின் யோக்கியதை.

வெள்ளாறுமணல்கொள்ளைக்குஎதிரானபோராட்டத்தின்போது கோர்ட்டுக்குப் போங்கள் என்று எங்களுக்கு ஆலோசனை சொல்கிறார் ஆர்.டி.ஓ. போகாமல் போராடியதால்தான் மணல் கொள்ளையை அங்கே நிறுத்த முடிந்தது. 30 ஆண்டுகளாக முடியாத முல்லைப்பெரியாறு பிரச்சினை, இலட்சக்கணக்கான விவசாயிகள் களத்தில் இறங்கியதால்தான் முடிவுக்கு





மாநாட்டில் கலந்துகொண்ட மக்கள் திரளின் ஒரு பகுதி மற்றும் மாநாட்டு உரைகளை உற்சாகத்தோடு ஆமோதிக்கும் பங்கேற்பாளர்.

வந்தது. டாஸ்மாக்கை மூடவேண்டும் என்றாலும் மக்கள் போராட்டம்தான் தீர்வு, நீதிமன்றம் அல்ல'' என்று நீதிதேவன் மீது இன்னமும் மயக்கம் கொண்டிருந்த மக்களுக்குத் தெளிவை ஏற்படுத்தினார் வாஞ்சிநாதன்.

நேரம் கடந்து விட்டதால் தனது உரையை சுருக்கமாக அமைத்துக் கொண்டார் ம.க.இ.க. பொதுச் செயலர் மருதையன். ''டாஸ்மாக்கை மூடுவதற்கு இந்த அரசதிகாரத்திடம் முறையிடுவது பயனற்றது. மக்கள் தாமே அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொள்வதொன்றுதான் தீர்வு என்பதை விளக்கிப் பேசவிருந்தேன். நேருரையாற்றிய அனைவரும் அந்த உண்மையை போலீசாருக்கே புரியும் விதத்தில் சொல்லி விட்டார்கள்.

தங்கள் அனுபவத்தில் இருந்து புரியவைத்து விட்டனர். இந்தக் கேடுகெட்ட அரசமைப்பைக் காப்பாற்றத்தான் நாம் தடிக்கம்புடன் நின்று கொண்டிருக்கிறோம் என்பது புரிந்து அவர்கள் வெட்கித் தலை குனிந்து நிற்பதை நான் கவனித்தேன்.

டாஸ்மாக்கில் மட்டுமல்ல, கிரானைட், ஆற்று மணல் முதல் கெயில் குழாய் வரை இந்த அரசமைப்பு ஒரு வழிப்பறிக் கொள்ளையன் போலச் செயல்படுகிறது. எங்களுக்கு எதுவும் செய்யவேண்டாம், உள்ளதைப் பறிக்காமல் இருந்தால் போதும் என்று அரசிடம் மக்கள் மன்றாடுவதை நாம் பார்க்கிறோம். மன்றாடாதீர்கள், போராடுங்கள் என்கிறோம். என்னை முதல்வராக்குங்கள் கடையை மூடுகிறோம் என்கிறார் அன்புமணி. நீங்கள் முதல்வர் ஆகும் நாள் வரை கடை திறந்திருக்க வேண்டுமா? எங்கள் தெருவில் இருக்கும் கடையை நாங்களே மூடமுடியுமே. அதைச் செய்வதற்கு எதற்காக உங்களையெல்லாம் முதல்வராக்க வேண்டும்? அதிகாரத்தை அவர்களுக்கு வழங்காதீர்கள், நீங்கள் கையில் எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று மாநாடு விடுக்கும் செய்தியைக் கூறி முடித்தார் மருதையன்.

இறுதியாக நிறைவுரையாற்றினார் மக்கள் அதிகாரத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் ராஜு. ''டாஸ்மாக் கடையை மூடுவதற்காக எதுவும் செய்யாதவர்கள்தான் மூட முடியாது என்று அவநம்பிக்கையை ஏற்படுத்துகிறார்கள். சட்டத்தை மக்கள் தம் கையில் எடுத்துக்கொள்ளக் கூடாது என்கிறது போலீசு.

தன் மனைவியை நெருப்புக்குப் பலி கொடுத்த நாகராஜ் இவர்களின் சட்டத்துக்கு கட்டுப்பட வேண்டுமா? தன்னுடைய மகளின் வாழ்க்கை நிலைக்குமா என்று நாள்தோறும் பயந்து கொண்டிருக்கும் விவசாயி, சட்டத்துக்குப் பயந்து எப்படி சும்மாயிருக்க முடியும்? தன்னை விதவையாக்கி, அவமானமாக நடத்தும் சமூகத்தின் மீது மந்திரிகுமாரிக்கு எப்படி மரியாதை வரும்? இந்த அரசமைப்பின் மீது மக்களுக்கு மதிப்பு போய்விட்டது. மிச்சம் இருப்பது அச்சம். அதை போக்கத்தான் இந்த மாநாடு.

என்ன செய்து விடுவார்கள்? பொய்வழக்குப் போடுவார்கள், பிணை மறுப்பார்கள்; மறுக்கட்டும், வேறு என்ன செய்ய முடியும்? டாஸ்மாக்கினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தின் அனுபவமும் ஒரு வெடிகுண்டு. அவற்றையெல்லாம் ஒன்றுசேர்த்து வெடிக்க வைப்பதுதான் எங்கள் வேலை.

எல்லாத்தையும் மக்களே பாத்துக்குவாங்கன்னா, நாங்க எதுக்கு என்று கேட்கிறார்கள் அதிகாரிகளும் போலீசாரும். அதான் நாங்களும் கேட்கிறோம். இவர்கள் இல்லையென்றால், நாடு இயங்காதா? சமீபத்திய வெள்ளத்தின்போது தெரியவில்லையா அரசின் யோக்கியதை? இந்த அரசாங்கத்தால் அழிவு தானேயன்றி, வேறு என்ன? குடிநீர் உள்ளிட்ட அடிப்படைத் தேவையைக்கூடச் செய்ய முடியாதவர்களுக்கு ஆள என்ன அருகதை இருக்கிறது? பெண்டாட்டியைக் கூட்டி கொடுத்து சம்பாதிப்பவன் குடும்பத் தலைவனா?

போதை, போலீசு. இதுதான் இரட்டை இலை. சாராயம் விற்பவன்தான் கல்வியும் விற்கிறான். அவன்தான் முதலாளி, அவன்தான் அமைச்சர். சாராய ஆலை அதிபர்தான் முதல்வர் என்றால், இதையெல்லாம் எதற்காக நாம் ஏற்க வேண்டும்? ஆற்றுமணல், தாது மணல், கெயில், கிரானைட் என்று கொள்ளையிடுகிறார்களே, யாரைக் கேட்டார்கள்? மக்களைக் கேட்டார்களா?



நீதித்துறை ஜெயா அரசின் கொள்ளைகளுக்குக் கைத்தடியாக நடந்துகொண்டு வருவதை அம்பலப்படுத்தி உரையாற்றிய மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையத்தைச் சேர்ந்த வழக்குரைஞர் வாஞ்சிநாதன், சிறப்புரையாற்றிய மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் பொதுச் செயலர் தோழர் மருதையன் மற்றும் மக்கள் அதிகாரம் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் ராஜு.

இந்த நாடு இவர்கள் அப்பன் வீட்டுச் சொத்தா? இந்த நாட்டின் நிரந்தர உரிமையாளர்கள் மக்கள். மக்கள் சொத்தைப் பாதுகாப்பதாகச் சொல்லிக் கொண்டு அதிகாரத்தில் இருப்பவர்கள்தான் அதனைக் கொள்ளையிடுகிறார்கள். அவர்கள் ஆளும் அருகதை இழந்துவிட்டார்கள். நாம் அவர்களுடைய அதிகாரத்தை ஏற்க மறுக்க வேண்டும். அதிகாரத்தை மக்கள் தம் கையில் எடுத்துக் கொள்ள வேண்டும்'' என்ற அறைகூவலுடன் தனது உரையை முடித்தார் ராஜு.

இறுதியாக, ம.க.இ.க மையக் கலைக்குழுவின் கலை நிகழ்ச்சி, ''மூடு டாஸ்மாக்கை'' என்ற பாடலுடன் தொடங்கியது. தன் மீதான தேசத்துரோக வழக்கிற்கு எதிராகக் குரல் கொடுத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்த கோவன், ''இந்தப் பாட்டுக்கு தேசத் துரோக வழக்கு உண்டா, கிடையாதா?'' என்ற எள்ளலுடன், மழை -வெள்ளம் குறித்த பாடலை அறிமுகப் படுத்தினார்.

''குடி - சிந்திக்காதே'' என்ற பாடல் டாஸ்மாக்கின் நோக்கம் வருவாய் மட்டுமல்ல, தமிழ் மக்களை மானமும் அறிவுமற்ற மந்தைகளாக்குவதுதான் என்பதை அம்பலப்படுத்தியது. ''அப்பாவைக் கெடுத்திட்டியே அம்மா'' என்ற சிறுமியின்துயரம் தோய்ந்த பாடல் குடியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் உள்ள கோடிக் கணக்கான குழந்தைகளின் அழுகுரலாக ஒலித்துப் பார்வையாளர்களைக் கண்கலங்கச் செய்தது.

மாலை 5 மணிக்குத் தொடங்கிய நிகழ்ச்சிகள் இரவு 11 மணிக்கு நிறைவுற்றன. கண்ணுக்கெட்டிய தூரம் வரை பல்லாயிரக்கணக்கில் திரண்டிருந்தனர் மக்கள். ஏழை எளிய மக்கள் முதல் கார்களில் வந்திறங்கிய நடுத்தர வர்க்கத்தினர் வரை யாரும் ஒரு கணம் கூட மேடையிலிருந்து வைத்த கண்ணை அகற்றவில்லை. குவிக்கப்பட்டிருந்த போலீசாரும் நிகழ்ச்சி தொடங்கியசிறிதுநேரத்திலேயேமாநாட்டின்பார்வையாளர்களாக மாறி விட்டனர். மாநாட்டிற்குத் திரண்ட மக்கள் கூட்டத்தைக் கண்ட போலீசு அதிகாரிகள், சுற்றுவட்டாரத்தில் இருந்த டாஸ்மாக் கடைகள் அனைத்தையும் மூடி விடுமாறு உத்தரவிட்டதாக மறுநாள் பத்திரிகை செய்திகள் கூறின. இது மக்களின் அதிகாரத்துக்கு வழங்கப்பட்ட மறைமுக அங்கீகாரம். நேர்மறையிலும் மக்கள் தமது அதிகாரத்தை நிலைநாட்டுவார்கள். மூடு டாஸ்மாக்கை என்ற முழக்கம் நிச்சயமாகச் செயல் வடிவம் பெறும்.

**- பு.ஜ. செய்தியாளர்கள்**


''புதிய ஜனநாயகம்'' உரிமையாளர் மற்றும்
இதர விவரங்கள் - படிவம் IV (விதி 8-இன் படி)

| | | |
|---|---|---|
| 1. வெளியிடும் இடம் | : | 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |
| 2. வெளியிடும் காலம் | : | மாதம் ஒருமுறை |
| 3. அச்சிடுபவர் பெயர் | : | இரா. சண்முகராசு |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |
| 4. உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் பெயர் | : | இரா. சண்முகராசு, |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |
| 5. ஆசிரியர் பெயர் | : | இரா. சண்முகராசு |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |

இரா. சண்முகராசுவாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

(ஒப்பம்) இரா. சண்முகராசு,
வெளியிடுபவர்.

1.3.2016

# அம்மாவின் வந்தனோபசார கடைசி ஆட்டம்!

**கடந்த ஐந்தாண்டுகளில் முட்டை தொடங்கி மின்சாரம் வரையிலான ஊழல்களின் மொத்தக் கணக்கையும் கூட்டினால், தமிழக அரசின் கடன் சுமை 2,47,031 கோடி ரூபாயாக அதிகரித்திருப்பதற்கான காரணம் தெரிய வரும்.**

கருணாநிதியின் குடும்ப ஆட்சியையும், ஊழல் ஆட்சியையும் ஒழித்துக் கட்டக்கூடிய உத்த மியாக ஜெயாவைத் தமிழக மக்கள் முன் நிறுத்தி, அச்சட்டசபை தேர்தலில் வெற்றியை வாரிச் சுருட்டியது தமிழகப் பார்ப்பனக் கும்பல்.

'பார் புகழும்' இப்பரத கண்டத்தில் ஊழலுக்கு எதிராக சவுண்டுவிடுவதுதான் இப்பொழுது அரசியல் பேஷனாக இருக்கிறது. ''யாரிடமும் கைநீட்டி இலஞ்சம் வாங்காதவன்தான் ஆளத் தகுதி வாய்ந்தவன்'' என அறிவிக்கும் அளவிற்கு நடுத்தர வர்க்கத்தினர் மத்தியில் இலஞ்சம், ஊழல் குறித்த பாமரத்தனமான கருத்துகள் முளைவிட்டு வருகின்றன. அப்படிபட்டதொரு நிலையில், தலையாரி முதல் தலைமைச் செயலர் வரை, கவுன்சிலர் தொடங்கி கலெக்டர், அமைச்சர்கள் ஈறாக, அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி ஊழல் கொள்ளையில் ஈடுபடும் அரசு மற்றும் பொது ஊழியர்களைப் பாதுகாக்கும் அரசாணையொன்றை கடந்த பிப்ரவரியில் வெளியிட்டு, ''நல்லவர்களையெல்லாம்'' திடுக்கிட வைத்திருக்கிறது அம்மா அரசு. வரலாற்றில் இதற்கு முன்பாக இப்படிபட்டதொரு அரசாணை எங்காவது, எப்பொழுதாவது வெளியாகியிருக்கிறதா எனக் கூறுமளவிற்கு கட்டுரையாளருக்கு வரலாற்று ஞானம் கிடையாது. அதேசமயம், சொத்துக் குவிப்பு வழக்கால் தான் அனுபவிக்க நேர்ந்த 'துயரங்கள்', தன்னையொத்த மற்ற கொள்ளையர்களுக்கும் வந்துவிடக் கூடாது என்ற பரந்த எண்ணத்தில் இந்த ஊழல் பாதுகாப்பு அரசாணையை அம்மா கொண்டுவந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

• • •

பார்ப்பன ஜெயா 2011-இல் மீண்டும் ஆட்சியைப் பிடித்ததில் ஆ.ராசா, கனிமொழிக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட 2ஜி வழக்கிற்கு முக்கியப் பங்குண்டு.

தி.மு.க. பதவிக்கு வந்தால், ஆட்சியை நடத்திச் செல்லும் போக்கில் ஊழல், கொள்ளையில் ஈடுபடுவார்கள் என்றால், ஜெயாவோ தனது ஆட்சியே கொள்ளை தான், அதிகார முறைகேடுகளின் மூட்டைதான் எனவாழ்ந்துகாட்டி வருபவர். அதோடு, ''அடித்த கொள்ளையைப் பார்த்துக் கொள்'' எனப் பகிரங்கப்படுத்தவும் தயங்காதவர். 1991-96 ஆட்சியில் நடந்த வளர்ப்பு மகன் திருமணம், 2001-06 ஆட்சியின் பொழுது மிடாஸ் சாராய ஆலைக்குத் திறப்பு விழா நடத்தியது, இப்பொழுது சென்னை-வேளச்சேரியில் உள்ள பீனிக்ஸ் மாலில் உள்ள 11 திரைகளைக் கொண்ட லக்ஸ் திரையரங்கை வளைத்துப் போட்டது என ஜெயா-சசி கும்பல் பகிரங்கமாக நடத்தியிருக்கும் கொள்ளைக்கும், அதன் வழியாகக் குவித்து வைத்துள்ள சொத்துக்களுக்கும் உதாரணங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

**என்னை உங்களால் என்ன செய்துவிட முடியும் என்ற அகங்காரத்தோடு, அகப்பட்டதையெல்லாம் திருடிக்கொண்டு ஓடும் கன்னக்கோல் கொள்ளையர்களைவிடக் கேவலமாக, ஆட்சியின் இறுதிக் கட்டம் நடைபெறுகிறது.**

லக்ஸ் திரையரங்கை ஜாஸ் சினிமாஸ் என்ற நிறுவனம் வாங்கியிருக்கிறது; அந்த நிறுவனத்தின் பூர்வாசிரம நாமம் ஹாட் வீல்ஸ் இஞ்ஜினியரிங் பிரைவெட் லிமிடெட். ஹாட் வீல்ஸ் சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள நிறுவனங்களுள் ஒன்று. ''ஜெயா-சசி கும்பல் வாங்கிக் குவித்த இலஞ்சப் பணத்தைப் புழக்கத்தில் விடுவதற்காக அவர்களால் தொடங்கப்பட்ட லெட்டர் பேடு நிறுவனம்தான் ஹாட் வீல்ஸ்; அதன் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும்'' என்று நீதிபதி குன்ஹா தீர்ப்பளித்திருந்தார்.

ஆள் மாறாட்டம் போல பெயர் மாறாட்டம் செய்யப்பட்டுள்ள ஜாஸ் சினிமாஸ் நிறுவ



ஜெயா-சசி கும்பலால் மிரட்டி வளைத்துப் போடப்பட்ட சென்னை-வேளச்சேரி பீனிக்ஸ் மாலில் அமைந்துள்ள லக்ஸ் திரையரங்கின் உட்புறத் தோற்றம்.

னத்தின் இயக்குநர்கள் கூட்டத்தில் சசிகலாவும் இளவரசியும் கலந்து கொண்டிருப்பதும்; அந்நிறுவனத்தின் தலைவராக இளவரசியும், அந்நிறுவனத்தின் இயக்குநர்களாக இளவரசியின் மருமகன் கார்த்திகேயனும், சசிகலாவின் மருமகன் சிவகுமாரும் நியமிக்கப்பட்டிருப்பதும்; இந்த மருமகன்கள் இருவரும் ஜெயா-சசிக்குச் சொந்தமான மிடாஸ் சாராய ஆலையிலும் இயக்குநர்களாக இருப்பதும் சந்தேகத்திற்கு இடமில்லாதவாறு வெளிவந்துள்ளன.

லக்ஸ் திரையரங்கம் வெறும் ஒரு கோடி, இரண்டு கோடி ரூபாய் பெறுமானமுள்ள அந்தக் காலத்து சினிமா கொட்டகை அல்ல. அந்த அதிநவீனமான திரையரங்குகளின் மதிப்பு 600 முதல் 1,000 கோடி ரூபாய் வரை இருக்கும் எனக் கூறப்படுகிறது. தான் ஒரு ரூபாய் மட்டுமே சம்பளமாகப் பெற்று வருவதாகக் கூறி வருபவர், ஜெயா. சசியோ, அந்த ஒரு ரூபாய் சம்பளக்காரியை அண்டிப் பிழைப்பவர். இப்படிபட்ட பின்னணி கொண்டவர்கள் 1,000 கோடி ரூபாய் மதிப்பு கொண்ட திரையரங்கை வாங்குவது எப்படி சாத்தியமானது என்பது தீவிரமான விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஒன்று. ஆனால், அம்மா மீதான விசுவாசம் காரணமாகவோ அல்லது அம்மாவைச் சந்தேகித்தால் என்ன வழக்குப் பாயுமோ என்ற அச்சம் காரணமாகவோ தமிழக ஊடகங்களும், நாணயஸ்தர்களும் இப்பிரச்சினையைக் காணாதவாறு கண்ணை மூடிக்கொண்டார்கள்; அல்லது தி.மு.க. மட்டும் யோக்கியமா எனக் கேட்டுத் தங்களின் நடுநிலை தவறாத் தன்மையைப் பறைசாற்றிக் கொண்டார்கள்.

ஜெயா-சசி கும்பல் அத்திரையரங்கை விலைக்கு வாங்கியதுகூட வர்த்தக நாணயத்தோடு நடைபெறவில்லை. வணிக வரித்துறை மற்றும் போலீசைக் கொண்டு அத்திரையரங்கு நிறுவன முதலாளிகளை மிரட்டி, கட்டப் பஞ்சாயத்து முறையில் இச்சொத்து எழுதி வாங்கப்பட்டிருக்கிறது. இது போலவே, சென்னை வடபழனியில் அமைந்துள்ள விஜயா ஃபோரம் மாலில் கட்டப்பட்ட திரையரங்குகள் செயல்படுவதற்கான உரிமம் வழங்குவதிலும் சிக்கல்களை ஏற்படுத்தி, அதனையும் வளைத்துப் போட முயன்றது ஜெயா-சசி கும்பல். ஆனால், லக்ஸ் திரையரங்கம் சுருட்டப்பட்டது வெளியே வந்ததைத் தொடர்ந்து தற்காலிகமாகப் பின்வாங்கிக் கொண்டது.

1991-96 கால ஆட்சியில் (கொடநாடு) எஸ்டேட்டுகளும், (பையனூர், சிறுதாவூர்) பங்களாக்களும், நிலங்களும் வளைத்துப் போடப்பட்டன என்றால், இந்த மூன்றாவது அத்தியாயத்தில் தமிழகமெங்கும் திரையரங்குகள் குறி வைக்கப்படுகின்றன. சொத்துக் குவிப்பு வழக்கு உச்சநீதி மன்ற விசாரணையில் இருந்துவரும் நிலையில், அது குறித்தெல்லாம் சிறிதும் அச்சமின்றி மேலும்மேலும் சொத்துக் குவிப்பு நடந்து வருகிறது என்பது ஜெயா கும்பல் நீதிமன்றங்களைச் சோளக்காட்டு பொம்மை அளவிற்குக்கூட கருதவில்லை எனக் காட்டுகிறது.

• • •

''இந்த ஆட்சி 40 பர்செண்ட் ஆட்சி'' எனப் பொதுப்பணித் துறை ஒப்பந்ததாரர்கள் பகிரங்கமாக சுமத்திய குற்றச்சாட்டின் வழியாகவோ, உதவி செயற்பொறியாளர் முத்துக் குமாரசாமியின் தற்கொலை வழியாகவோ, ஆவின் பால் கலப்பட ஊழல் வழியாகவோ, லக்ஸ் திரையரங்கம் வழியாகவோ, அ.தி.மு.க. ஆட்சியில் 25 துறைகளில் நடந்த ஊழல்கள் குறித்து கவர்னரிடம் கொடுக்கப்பட்ட பட்டியல் வழியாகவோ அம்மா ஆட்சியின் 'ஒப்பிலா'த் தன்மையைப் புரிந்து கொள்ள முடியாதவர்களுக்கும் பொட்டில் அடித்தாற் போல புரிய வைத்தது வெள்ள நிவாரணத்தில் ஒட்டப்பட்ட ஸ்டிக்கர். அப்படி அம்பலமான பிறகும்கூட அம்மாவின் ஊழல் திருவிளையாடல் நிற்கவேயில்லை. என்னை உங்களால் என்ன செய்துவிட முடியும் என்ற அகங்காரத்தோடு, அகப்பட்டதையெல்லாம் திருடிக்கொண்டு ஓடும் கன்னக்கோல் கொள்ளையர்களைவிடக் கேவலமாக, ஆட்சியின் இறுதிக் கட்டம் நடைபெறுகிறது.

தமிழகத்தைச் சேர்ந்த எட்டு பல்கலைக்கழகங்கள் கடந்த சில மாதங்களாகவே தலையில்லாத முண்டங்களாக, அதாவது துணை வேந்தர்கள் இன்றி இயங்கி வந்தன. இதற்குக் காரணம் அப்பதவிகள் 6 கோடி ரூபாய்க்கு மேல் விலை பேசப்படுவதாகவும், பேரம் இன்னும் படியாததால்தான் துணை வேந்தர்கள் அறிவிக்கப்படவில்லை என்றும் எதிர்க்கட்சிகள் குற்றஞ்

சாட்டி வந்தன. இந்நிலையில் பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரைகளின்படித் துணை வேந்தர்களைநியமிக்கஉத்தரவிடக்கோரிகல்வியாளர்அனந்தகிருஷ்ணன் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தார். இவ்வழக்கின் தீர்ப்பு பிப்ரவரி முதல் வாரத்தில் வந்துவிடும் என எதிர்பார்க்கப்பட்ட நேரத்தில், அதனை முந்திக்கொண்டு நான்கு பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர் நியமிக்கப்பட்ட அறிவிப்புகள் கவர்னர் மாளிகையிலிருந்து இரவு நேரத்தில் வெளியிடப்பட்டன.

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணை வேந்தராக நியமிக்கப்பட்டுள்ள கே.பாஸ்கரின் குறிப்பிடத்தக்க தகுதி, அவர் தமிழக ஆளுநர் ரோசய்யாவுக்கு நெருக்கமானவர் என்பதுதான். தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக நியமிக்கப்பட்டுள்ள தங்கசாமி, ஓ.பன்னீர் செல்வத்தின் நெருங்கிய உறவினர்.

ஒரு கல்லூரியின் முதல்வராக நியமிக்கப்படுவதற்குக்கூடத் தகுதியில்லாதவர் எனக் கூறப்படும் வள்ளி, அன்னை தெரசா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக நியமிக்கப்பட்டிருக்கிறார். 10 ஆண்டுகள் பேராசிரியராகப் பணியாற்றியிருக்க வேண்டும் என்ற விதியைக் கடாசிவிட்டு, திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக பேராசிரியர் முருகன் நியமிக்கப்பட்டிருக்கிறார். நியமிக்கப்பட்டவர்களின் கல்வி மற்றும் பணித் தகுதியே எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது.

இந்த நியமனங்கள் ஒருபுறமிருக்க, அண்ணா பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளில் 112 உதவிப் பேராசிரியர்களை நியமிப்பதற்கு, பதவி ஒன்றுக்கு ரூ.35 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டு வசூல் வேட்டை தொடங்கியிருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ் சுமத்தியுள்ளன. காசு கொடுத்தவனுக்கு சீட்டு என்பதை உறுதி செய்வதற்காகவே, அப்பதவிகளுக்கான எழுத்துத் தேர்விலும், நேர்முகத் தேர்விலும் முறைகேடான மாற்றங்களை அ.தி.மு.க. அரசு செய்திருக்கிறது. மேலும், சுகாதாரத் துறையில் 1,200 பணியிடங்களையும், செய்தித் துறையில் மக்கள் தொடர்புஅலுவலர்களையும், கால்நடைத் துறையில் காலி பணியிடங்களையும் நேரடியாக நியமிப் பது என்ற போர்வையில் வசூலுக்கான வாசல் திறந்து விடப்பட்டிருப்பதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி குற்றஞ் சாட்டியிருக்கிறார்.



ஜெயாவால் தமிழக அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்ட தமிழக அரசு செய்தித் துறையின் முன்னாள் செயலர் ராஜாராம்.

இந்த முறைகேடுகள், அதிகார அத்துமீறல்களையெல்லாம் தூக்கிச் சாப்பிடும் வண்ணம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் தனது விசுவாசிகள், கட்சிக்காரர்கள் என 11 பேரை ஒரே சமயத்தில் உறுப்பினர்களாக்கி, அத்தன்னாட்சி பெற்ற அரசு நிறுவனத்தை அ.தி.மு.க.வின் கிளையாக்கிவிட்டார், ஜெயா. முன்னாள் வளர்ப்பு மகன் சுதாகரன் மீது ஜெயா போட்ட ஹெராயின் வழக்கில் அவரை விடுதலை செய்து உத்தரவிட்டவரும், சுதாகரனின் உறவினருமான ஓய்வு பெற்ற நீதிபதி ராமமூர்த்தி; தமிழக அரசின் தலைமை வழக்குரைஞராக இருந்து பின்னர் டி.என்.பி.எஸ்.சி. தலைவராக நியமிக்கப்பட்ட நவநீதகிருஷ்ணனுக்குக் கைத்தடியாக இருந்தவரும், சொத்துக் குவிப்பு வழக்கை கவனித்து வந்தவருமான

ஜெயாவின் தலைமையில் உள்ள அரசின் ஆணவத்தையும், அதன் கீழ் தமிழக மக்களின் இழிநிலையும் எடுத்துக்காட்டும் காட்சிகள்: ஜெயாவின் பிறந்த நாளையொட்டி சென்னை-வேளச்சேரியில் நடந்த அம்மா படத்தைப் பச்சை குத்தும் நிகழ்ச்சியில் சிக்கிக் கொண்ட ஒரு மாணவியின் கதறல் (இடது) மற்றும் உடுமலைப்பேட்டையில் நடந்த இலவசத் திருமண விழாவில் ஜெயாவின் ஸ்டிக்கரைத் தலையில் கட்டிவிடப்பட்ட மணமக்கள்.





வழக்குரைஞர் முத்துராஜ், கரை வேட்டி கட்டாத அ.தி.மு.க. தொண்டர் எனப் பெயரெடுத்த செய்தித் துறையின் செயலராக இருந்து ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி ராஜாராம் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள முக்கியமான விசுவாசிகள்.

• • •

கடந்த ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் தமிழகம் எந்தளவிற்குச் சீரழிக்கப்பட்டிருக்கிறது என்பதை இடைக்கால நிதிநிலை அறிக்கையும், மின் சார வாரியத்தில் ஏற்பட்டுள்ள நட்டமும் எடுத்துக் காட்டுகின்றன. அ.தி.மு.க. பதவியேற்றபொழுது ஏறத்தாழ ஒரு இலட்சம் கோடியாக இருந்த தமிழக அரசின் கடன், இந்த ஐந்தாண்டுகளில் மேலும் 1,47,000 கோடி ரூபாய் அதிகரித்து, 2,47,031 கோடி ரூபாயை எட்டியிருக்கிறது. இத்துணைக்கும் கடந்த ஐந்தாண்டுகளில் அ.தி.மு.க. அரசு எந்தவொரு உற் பத்தித் திட்டத்திலும் முதலீடே செய்யவில்லை; மேலும், வரி உயர்வு, பேருந்து மற்றும் மின் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு ஆகிய பொருளாதாரத் தாக்குதல்களின் மூலம் மக்களிடமிருந்து 1,57,000 கோடி ரூபாய் பிடுங்கிக் கொண்டிருக்கிறது. இதன் பிறகும் தமிழக அரசின் கடன் சுமை அதிகரித்திருக்கிற தென்றால், பிடுங்கப்பட்ட வரிப் பணமும், வாங்கப் பட்ட கடனும் கரைந்து போனதற்குக் காரணம் ஜெயா-சசி கும்பல் அடித்திருக்கும் கமிசன் மற்றும் கொள்ளை.

இந்தப் பகற்கொள்ளைக்குப் பலியான துறை களுள் முதன்மையானது தமிழக மின்சார வாரியம். தமிழகத்தை மிகைமின் மாநிலமாக மாற்றிவிட்டேன் என்ற ஜெயாவின் மோசடியான சுயதம்பட்ட அறிவிப் பின் பின்னே வாரியம் மொட்டையடிக்கப்பட்டு, கட னாளி நிறுவனமாக மாற்றப்பட்டிருப்பது மறைக்கப் பட்டிருக்கிறது. கமிசன் அடிப்பதற்காகவே தனியாரி டமிருந்து அதிக விலையில் மின்கொள்முதல் செய் யும் ஒப்பந்தங்கள் பல்வேறு விதிமுறைகளை மீறிப் போடப்பட்டு, மின் வாரியம் படுகுழியில் தள்ளப்பட் டிருக்கிறது.

எடுத்துக்காட்டாக, சூரிய ஒளி மின்சாரத்தை யூனிட் ஒன்றுக்கு ரூ.5.84 என்ற விலையில் வாங்க வேண்டும் என மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அறி வுறுத்தியிருப்பதற்கு மாறாக, அதானி குழுமத்திட மிருந்து யூனிட் ஒன்றுக்கு ரூ.7.01 விலையில் மின் சாரம் வாங்க ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது.

சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் விலைச் சரிவைத் தொடர்ந்து LSHS எனப்படும் எரி பொருளைக் கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய் யும் பொதுத்துறை நிறுவனங்கள் ஒரு யூனிட் மின் சாரத்தை ரூ.4.27-க்கு விற்க முன்வந்துள்ள நிலை யில், அதனைப் புறக்கணித்துவிட்டு இந்த எரி பொருளைப் பயன்படுத்தும் தனியார் மின் உற்பத் தியாளர்களிடமிருந்து ஒரு யூனிட் மின்சாரத்தை நிலைக்கட்டணத்துடன்சேர்த்துரூ.6.55-க்குவிலைக்கு வாங்கி வருகிறது, மின்சார வாரியம். தனியார் சூரிய ஒளி மின்னுற்பத்தி நிறுவனங்களுக்கு அதிக விலை கொடுப்பதற்காக, அவர்களிடமிருந்து ஒரு மெகா வாட்டுக்கு ரூ.15 இலட்சம் கையூட்டுப் பெறப்படு வதாகக் குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன.

சுருக்கமாகச் சொன்னால், மின்சார வாரியத்தை தனது கொள்ளைக்கான காமதேனுவாகக் கருதி நடத் தியிருக்கிறது, ஜெயா-சசி கும்பல்.

திட்டத்தில் கமிசன் அடிப்பதல்ல, கமிசனுக்கா கவே திட்டங்கள் என்பதுதான் அம்மா ஆட்சியின் கொள்கை. கிரானைட் கொள்ளை குறித்து விசா ரணை நடத்திய சகாயம் குழுவில் இடம் பெற்றி ருந்த மதுவை மாவட்ட வேளாண் இயக்குநர் ஜெய சிங் ஞானதுரை, தான் ஓய்வு பெற்றுச் சென்ற நாளில் ஆற்றிய உரையில், ‘‘வேளாண்துறை அமைச்சர் அக்ரி. கிருஷ்ண மூர்த்தி கடந்த 26.01.2015 அன்று இரவு என்னை செல்பேசி மூலம் தொடர்புகொண்டு பேசி னார். விவசாயிகளுக்கு வழங்குவதற்கான நுண்ணூட் டச் சத்துக்கள் தமிழக அரசின் வேளாண் துறை யில் கிலோ ரூ. 60 என்ற விலையில் கிடைக்கிறது. ஆனால், இதே நுண்ணூட்டச்சத்து உரத்தை தனியாரிட மிருந்து கிலோ ரூ.120 என்ற விலையில் வாங்கும்படி அவர் என்னைக் கட்டாயப்படுத்தினார். அதற்கான உத் தரவில் நான் கையெழுத்திடவில்லை என்றால் எனது பணியிடமாற்ற ஆணையில் கையெழுத்திடப் போவ தாக மிரட்டினார். என்னை சென்னைக்கு இடமாற்றம் செய்வதற்கானஆணையையும்அவர்படித்துக்காட்டி னார். அதன் பின் பிப்ரவரி முதல் வாரத்தில் அமைச் சரின்உதவியாளர்என்னைதொடர்புகொண்டு அமைச் சர் அக்ரி. கிருஷ்ணமூர்த்தி என்னிடம் பேச விரும்பு வதாக தெரிவித்தார். ஆனால், நான் பேச மறுத்துவிட் டேன்’’ என நடந்ததைக் கூறியிருக்கிறார். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்; தமிழகம் கடந்த ஐந் தாண்டுகளில் 1,40,000 கோடி ரூபாய் கடனுக்குள் எப் படித் தள்ளப்பட்டது என்பதை இந்த உரை நமக்குப் புரிய வைக்கிறது.

தமிழக மக்களின் மீது இந்த ஐந்தாண்டுகளில் ஏற்றப்பட்டுள்ள 1,40,000 கோடி ரூபாய் கடன் போயஸ் தோட்டத்தில் ரொக்கமாகவும், சொத்துப் பத்திரங்களாகவும் பதுக்கப்பட்டுள்ளன. இந்தச் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதான் தமிழக மக் கள் முன்னுள்ள, செய்து முடிக்க வேண்டிய மாபெரும் கடமையாகும். அதற்குச் சட்டமன்றத் தேர்தலும், நீதிமன்றங்களும் பயன்படாது என்பதை ஜெயா மீதான சொத்துக் குவிப்பு வழக்கின் போக்கிலிருந்தே யாரும் புரிந்து கொள்ள முடியும்.

● குப்பன்

# வாழவைக்கும் ஊழலுக்கு ஜே!

## – ஜெயலலிதாவின் புதிய அரசாணை

*அரசிடம் அனுமதி வாங்காமல், இலஞ்சம் வாங்கிய டவாலி மீது கூட வழக்குப் பதிவு செய்ய முடியாது என்று அரசாணை போட்டு, ஊழல் பேர்வழிகளின் குலசாமி ஆகியிருக்கிறார் அம்மா.*

''**வீ**ழ்வது நானாக இருந்தாலும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்'' என்பது தமிழ் மக்களின் காதில் புளித்துக் கிடக்கும் அடுக்குமொழி வசனங்களில் ஒன்று. அவ்வசனத்தில் சிறியதொரு திருத்தம் செய்து, ''வீழ்வது நானாக இருந்தாலும் வாழ்வது ஊழலாக இருக்கட்டும்'' என்று புதியதொரு வசனத்தை வழங்கியிருக்கிறார் ஜெயலலிதா. சொத்துக் குவிப்பு வழக்கில் இறுதித் தீர்ப்பை எதிர்நோக்கியிருக்கும் ஜெ., ''நான் பட்ட துன்பத்தை எதிர்காலத்தில் ஒரு டவாலி கூட அனுபவிக்கக் கூடாது'' என்று தாயுள்ளத்துடன் சிந்தித்து, பிப்ரவரி 2-ஆம் தேதியன்று ஒரு அரசாணையைப் பிறப்பித்திருக்கிறார்.

அம்மா போட்டிருக்கும் புதிய அரசாணை, இனி ஒரு கலெக்டர் ஆபீசு டவாலியின் மீது ஊழல் குற்றத்துக்காக வழக்குப் பதிவு செய்ய வேண்டுமென்றாலும், அரசின் கருத்தைக் கேட்காமல், அப்படி ஒரு வழக்கைப் பதிவு செய்யவோ, விசாரிக்கவோ கூடாது என்று ஊழல் தடுப்பு - கண்காணிப்பு ஆணையத்துக்குத் தடை விதிக்கிறது. அதாவது, ''இலஞ்சம் கேட்ட சப்-இன்ஸ்பெக்டரை இலஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் மறைந்திருந்து லபக் என்று பிடித்தனர்'' என்று எப்போதாவது தினத்தந்தியில் செய்தி வருமே, அப்படிப்பட்ட 'கெட்ட' செய்திகள் இனி வரவே வராது.

ஒரு அரசு ஊழியருக்கு எதிராக ஊழல் தடுப்பு கண்காணிப்பு இயக்குநரகத்திடம் (Directorate of Vigilance and Anti Corruption - DDVAC) நீங்கள் புகார் செய்தால், அந்தப் புகார் அங்கிருந்து கண்காணிப்பு ஆணையத்துக்கு (Vigilince commission) அனுப்பப்பட வேண்டும். கண்காணிப்பு ஆணையம் அந்தப் புகாரை அரசுக்கு (அதாவது சம்பந்தப்பட்ட துறைக்கு) அனுப்பி, அவர்களுடைய ஒப்புதலைப்பெற்று, அதன்பின்னர்தான் ஊழல் புகார் மீது வழக்கே பதிவு செய்ய வேண்டும் என கூறுகிறது, இந்த அரசாணை.

சுருக்கமாகச்சொல்வதானால், ஒருதாசில்தார் ஆபீசு குமாஸ்தாவுக்கு எதிராக நீங்கள் விஜிலென்சில் புகார் கொடுத்தால், அது தலைமைச் செயலருக்குப் போய், மாவட்ட ஆட்சியர் வழியாக சம்பந்தப்பட்ட தாசில்தாருக்கு வந்து சேரும். ஏட்டுக்கு எதிரான புகார் என்றால் இன்ஸ்பெக்டரிடம் வரும். இவர்களிடம் கருத்து கேட்டு, அதன் பின்னர்தான் நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் என்ன கருத்து சொல்வார்கள், என்ன விதமான நடவடிக்கை எடுக்கப்படும் என்று விளக்கத் தேவையில்லை.

மதுவிலக்குத் துறை டாஸ்மாக் கடையை நடத்திக் கள்ளச்சாராயத்தை ஒழித்திருப்பது போலவே, இந்த அரசாணையும் ஊழலை ஒழித்து விடும்.

இனி, எந்த அரசு ஊழியர் மீது புகார் வந்தாலும் வழக்கு பதிவு செய்யப்படாது என்பதால், ஊழல் குற்றம் சாட்டுவோர் மீதான அவதூறு வழக்குகளும், முத்துக்குமாரசாமி போன்றோரின் தற்கொலைகளும்தான் அதிகரிக்குமே தவிர, ஊழலைப் பொருத்தவரை அது அதிகாரபூர்வமாக ஒழிக்கப்பட்டுவிடும்.

> இனி, எந்த அரசு ஊழியர் மீது புகார் வந்தாலும் வழக்கு பதிவு செய்யப்படாது என்பதால், ஊழல் குற்றம் சாட்டுவோர் மீதான அவதூறு வழக்குகளும், முத்துக்குமாரசாமி போன்றோரின் தற்கொலைகளும்தான் அதிகரிக்குமே தவிர, ஊழலைப் பொருத்தவரை அது அதிகாரபூர்வமாக ஒழிக்கப்பட்டுவிடும்.




• • •

இந்த அரசாணை அநீதியானது என்று சிலர் கருதலாம். ஆனால், நீதியைநிலைநாட்டும் பொருட்டும், உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு இணங்கவும்தான் இந்த அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதனை விளங்கிக் கொள்ள இவ்வரசாணை

பிறப்பிக்கப்பட்டதன் பின்புலத்தைத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள் எத்தகைய ஊழல் பேர்வழிகளாக இருந்தாலும், அவர்கள் மீது இலஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க இயலாத வண்ணம் சில சட்டப் பாதுகாப்புகள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி மீது இலஞ்சப்புகார் வந்தால், அதற்கு முகாந்திரம் உள்ளது என்று கருதி தலைமைச் செயலரோ அல்லது மத்திய அரசின் அமைச்சரவைச் செயலரோ அனுமதி கொடுத்தால் மட்டும்தான் அவர்கள் மீது விசாரணையே நடத்த முடியும் என்ற நிலைமை இருந்தது.

இதற்கு எதிராக வினீத் நாராயண் என்பவர் உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இவ்வழக்கில், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகளுக்கு இப்படி ஒரு சிறப்பு சலுகை வழங்கக் கூடாது; அவர்கள் மீது இலஞ்சப் புகார் வந்தால் ஊழல் கண்காணிப்புத் துறை (Central Vigilance Commision) உடனடியாக விசாரணை நடத்தலாம்; அதற்கு யாரிடமும் முன் அனுமதி பெறத் தேவையில்லை என 1997 -இல் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.



தனக்கு உச்சநீதி மன்றத்தில் விடுதலை கிடைக்கிறதோ இல்லையோ, தலையாரி முதல் தலைமைச் செயலர் வரை, கவுன்சிலர் முதல் அமைச்சர் வரை அனைவரையும் ஊழல் வழக்குகளிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பெழுதிவிட்டார், ஜெயா.

இந்தத் தீர்ப்புக்குப் பின்னரும் அதிகார வர்க்கத்தைப் பாதுகாக்கும் நோக்கில், ‘‘மத்திய அரசின் இணைச்செயலர் அல்லது அதற்கு மேற்பட்ட தகுதியில் உள்ள அதிகாரிகள் மீது ஊழல் வழக்கு பதிவு செய்ய வேண்டுமானால், மத்திய அரசின் அனுமதி பெற வேண்டும்’’ என்றொரு விதியை 2003- இல் உருவாக்கியது வாஜ்பாய் அரசு. ‘‘இந்த விதி, அரசமைப்பின் உறுப்பு 14 கூறுகின்ற ‘சட்டத்தின் முன் அனைவரும் சமம்’ என்ற கோட்பாட்டுக்கு எதிரானது; ஒரு அரசு ஊழியரின் பதவி அல்லது தகுதி காரணமாக அவர் எந்தவித சிறப்புச் சலுகையும் பெற முடியாது. எல்லா ஊழல் அலுவலர்களும் சமமாகத்தான் நடத்தப்படவேண்டும். அவர்களுக்கிடையே பாரபட்சம் காட்டக் கூடாது’’ என்று உச்ச நீதி மன்றத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு மே, 2014-இல் தீர்ப்பளித்தது.

இருந்த போதிலும், இந்தத் தீர்ப்புக்கு இணங்கத் தமிழக அரசு தனது சட்டத்தைத் திருத்தவில்லை. தமிழக அதிகாரிகளுக்கு ஊழல் வழக்குகளில் காட்டப்பட்டிருந்த சலுகை அப்படியே நீடித்தது. தமிழக அரசை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு பொது நல வழக்கைத் தொடர்ந்தார் வழக்கறிஞர் புகழேந்தி.

இந்த வழக்கு விசாரணையின்போது, ‘‘ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகும் அரசு அலுவலர்களுக்கிடையே பாரபட்சம் காட்டக்கூடாது என்று உச்சநீதி மன்றம் கூறியுள்ளதைக் கணக்கில் கொண்டு, பொருத்தமான சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருகிறோம்’’ என்று ஜெ. அரசின் தலைமை வழக்குரைஞர் சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி கவுலிடம் மீண்டும் மீண்டும் உறுதியளித்தார். அக்டோபர் 2015-இல் இதையே ஒரு பிரமாணப் பத்திரமாகவும் ஜெ. அரசு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இதனைத் தொடர்ந்து வந்திருப்பதுதான் அம்மாவின் இந்த அர சாணை.

ஊழல்வழக்குகளைப்பொருத்தவரை பியூனுக்கும் கலெக்டருக்கும் ஒரே சட்டம்தான் - பாரபட்சம் காட்டக் கூடாது என்றது உச்சநீதிமன்றம்.

‘‘பாரபட்சம் கூடாது, அவ்வளவுதானே! கலெக்டருக்கு என்ன சட்டமோ அதுதான் பியூனுக்கும் என்று மாற்றிவிடுகிறோம். கலெக்டர் மீது ஊழல் வழக்கு தொடர வேண்டுமானால் அரசு அனுமதி தேவை என்பதைப் போலவே, டவாலி மீது வழக்கு தொடர வேண்டுமென்றாலும் அரசு அனுமதி தேவை என்று திருத்தி விட்டோம். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை நிலை நாட்டி விட்டோம். இந்த அரசாணை அரசமைப்பின் உறுப்பு 14-ஐ மீறியிருப்பதாக யாரும் குறை சொல்ல முடியாது’’ என்று நீதிமன்றத்தை எள்ளி நகையாடுகிறது ஜெயலலிதா அரசு.

தனக்கு உச்சநீதி மன்றத்தில் விடுதலை கிடைக்கிறதோ இல்லையோ, தலையாரி முதல் தலைமைச் செயலர் வரை, கவுன்சிலர் முதல் அமைச்சர் வரை அனைவரையும் ஊழல் வழக்குகளிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பெழுதிவிட்டார், ஜெயா.

• தொரட்டி

# கெயில் உச்சநீதிமன்றத் தீர்ப்பு:

# ராமன் பாலத்துக்கு நீதி! விவசாயிகளின் நிலத்துக்கு அநீதி!!

*ராமர் பாலத்தைக் காப்பாற்ற சேது சமுத்திர திட்டத்தை மாற்றுப் பாதையில் செயல்படுத்தச் சொல்லும் உச்சநீதி மன்றம், எரிவாயுக் குழாய்களை மாற்றுப் பாதையில் கொண்டு செல்லக் கோரினால் சீறுகிறது.*

எளியவர்களின் கடைசிப் புகலிடம் நீதிமன்றம் தான் என முதலாளித்துவ ஊடகங்களாலும், அறிவுத் துறையினராலும் முன்னிறுத்தப்படும் அந்த இரட்ச கன் ஒரு பசுத்தோல் போர்த்திய புலி என்பதை எரி வாயு குழாய் பதிப்பு வழக்கில் உச்சநீதி மன்றம் அளித் திருக்கும் தீர்ப்பு மீண்டும் எடுத்துக் காட்டியிருக்கிறது. தமிழகத்தின் மேற்கே அமைந்துள்ள கோவை, திருப் பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ் ணகிரி மாவட்டங்களைச் சேர்ந்த நூற்று முப்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களையும், அவ்வூர்களைச் சேர்ந்த 5,842 சிறு விவசாயிகளை நேரடியாகவும், பல்லாயி ரக்கணக்கான மக்களை மறைமுகமாகவும் பாதித்து, அவர்களின் நிகழ்கால சேமிப்புகளையும், எதிர்கால வாழ்க்கையையும் ஒருசேர நிர்மூலமாக்கவுள்ள இத் தீர்ப்பில், ''தேசிய நலனின் முன்னே விவசாயிகளின் உணர்ச்சிகளுக்கெல்லாம் இடங்கொடுக்க முடியாது'' என ஞான உபதேசம் செய்திருக்கிறார்கள், உச்சநீதி மன்ற நீதிபதிகள்.

தமிழகத்தின் மேற்கு மாவட்ட விவசாயிகள் கொச்சியிலிருந்து பெங்களூருக்கு குழாய் வழியாக இயற்கை எரிவாயுவை எடுத்துச் செல்லும் கெயிலின் (இந்திய எரிவாயுக் கழகம்) திட்டத்தை முற்றிலுமாக நிராகரிக்கவில்லை. தங்களின் கிராமம், வயல்வெளி கள், பயிர்கள், கிணறுகள், வீடுகள், பசுமாட்டுக் கொட் டகைகள், கோழிப் பண்ணைகள் ஆகியவற்றை அழித் துக் குழாய்களைப் பதிப்பதற்குப் பதிலாக, அக்குழாய் களை மாற்றுப் பாதையில் - நெடுஞ்சாலை வழியாக கெயில் நிறுவனம் எடுத்துச் செல்ல வேண்டும் என் பதுதான் அவர்களின் கோரிக்கை. இதைக் கோரும் உரிமை விவசாயிகளுக்கும் கிடையாது, தமிழக அரசுக் கும் கிடையாது -எனக் கட்டளையிட்டுள்ள உச்சநீதி மன்றம், ''கேரளாவைப் போல, கர்நாடகாவைப் போல தமிழ்நாடும் இத்திட்டத்தால் பலன் பெற வேண்டாமா?'' என பேரம் பேசி, அதற்கு 136 கிரா மங்களைச் சேர்ந்த விவசாயிகளின் வாழ்க்கையைப் பலியிட்டிருக்கிறது.


கொச்சி-குட்டநாடு-பெங்களூரு-மங் களூரு குழாய் திட்டம் 2011-ஆம் ஆண்டு முடிவில் அன்றைய காங்கிரசு கூட்டணி அரசால் இறுதி செய்யப்பட்டு, அதற்குத் தமிழக மற்றும் கேரள மாநில அரசுகளின் ஒப்புதலும் பெறப்பட்டது. கொச்சியி லிருந்து கோழிக்கோடு வழியாக கர்நாடகா வின் மங்களூருக்கும், கொச்சியிலிருந்து பாலக்காடு, கோவை, சேலம், கிருஷ்ணகிரி வழியாக பெங்களூ ருக்கும் இயற்கை எரிவாயுவைக் கொண்டு செல்லும் இத்திட்டத்தின் மொத்த தூரம் 1,104 கி.மீ. இதில் முக் கிய எரிவாயு தடத்தின் (Main pipe line) நீளம் மட்டும் 893 கி.மீ. எரிவாயுவைக் கொண்டு செல்லுவதற்கு கேரளாவில் 501 கி.மீ. தூரத்திற்கும், தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களில் 310 கி.மீ. தூரத்திற்கும், கர் நாடகாவில் 60 கி.மீ. தூரத்திற்கும் குழாய்கள் பதிக்க வேண்டும்.

இதற்கு கேரளாவின் காசர்கோடு, கண்ணூர், கோழிக்கோடு, மலப்புரம், திரிசூர், எர்ணாகுளம், பாலக்காடு மாவட்டங்களிலும், கர்நாடகாவின் தட்சிண கன்னடா, சாம்ராஜ்நகர், மாண்டியா, பெங் களூரு மாவட்டங்களிலும் விவசாயிகளிடமிருந்து நிலங்கள் கையகப்படுத்தப்பட்டிருப்பதாக செய்தி கள் வெளிவந்துள்ளன. ஆனாலும், தமிழகத்தின் ஏழு

பெட்ரோலியம் மற்றும் தாதுப் பொருட்கள் குழாய் பதிப்புச் சட்டமானது, குழாய் பதிக்கப் பட்டுள்ள நிலத்தைப் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிப்பதோடு, குழாய்களுக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டால், அதற்கான பொறுப்பை பட்டாதாரரின் மீது சுமத்தி அவர் மீது கிரிமினல் வழக்கு தொடுக்கும் அதிகாரத்தை கெயிலுக்கு அளிக்கிறது. அவ்வழக்குகளில் விவசாயிதான் தன்னைக் குற்றமற்றவராக நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டும். தவறினால், அவருக்கு இரண்டு ஆண்டுகள் முதல் ஆயுள் தண்டனை வரையும் இச்சட்டத்தின்படி அளிக்க முடியும்.

மாவட்ட விவசாய நிலங்களில் குழாய் களைப் பதிப்பதற்குத்தான் கெயில் முண்டிக்கொண்டு நிற்கிறது.

இத்திட்டத்தை தமிழக விவசாயி களைப் போலவே, கேரள, கர்நாடகா மாநில விவசாயிகளும் எதிர்த்து நிற்கின்ற னர். ‘‘அமெரிக்க தரத்தில் இத்திட்டத்தை மேற்கொண்டாலும், எங்கள் நிலங்களில் குழாய் களைப் பதிப்பதை அனுமதிக்க மாட்டோம்’’ என அவ்விவசாயிகள் கூறு வதாக தி இந்து நாளிதழ் செய்தி வெளி யிட்டிருக்கிறது. கேரள விவசாயிகளின் எதிர்ப்பால் கொச்சி-மங்களூரு குழாய் பதிப்பு திட்டம் முந்தைய காங்கிரசு ஆட்சி யிலேயே கைவிடப்பட்டதாகவும் செய் திகள் வெளிவருகின்றன. உண்மை இவ் வாறிருக்க, தமிழக விவசாயிகள் மட்டும்தான் இத் திட்டத்தின் மதிப்பு தெரியாமல் எதிர்த்துக் கொண்டு நிற்பதாக உச்சநீதி மன்றம் கூறியிருப்பது கடைந் தெடுத்த பொய்.



கெயில் குழாய் செல்லும் பாதை.

• • •

விளைநிலங்களில் இரண்டு அடி விட்டமுள்ள குழாய்கள் ஒரு மீட்டர் ஆழத்தில் பதிக்கப்பட்டு, குழாய் செல்லும் இருபுறமும் சேர்த்து 66 அடி அகலம் கொண்ட நிலப்பகுதியை கெயில் நிறுவனம் தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளும். நிலத்தின் பட்டாவைத் தனது பெயருக்கு மாற்றிக் கொள்ள வில்லை என்றும், அந்தக் குறிப்பிட்ட நிலப் பகுதி யின் அனுபோக உரிமையை மட்டுமே பெற்றிருப் பதாகவும், மீதமுள்ள நிலப்பகுதியில் பட்டாதாரர் கள் விவசாயம் செய்து கொள்ள உரிமையுண்டு எனத் தேன் தடவிய வார்த்தைகளில் இந்தக் கையகப்படுத் தலை கெயில் நிறுவனமும், மைய அரசும், உச்சநீதி மன்றமும் நியாயப்படுத்தியுள்ளன.

கெயில் குறிப்பிடும் இந்த அனுபோக உரிமை விளைநிலங்களைப் புறக்கடை வழியாக முழுமை யாக ஆக்கிரமித்துக் கொள்ளும் நயவஞ்சகம் நிறைந் தது. குழாய் செல்லும் பாதை விளைநிலத்தை இரண்டு துண்டுகளாக்கி, அதனை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலைக்கு விவசாயி களைத் தள்ளியிருக்கிறது. மேற்கு மாவட்டங்களில் தென்னை, மா, பலா, புளி போன்ற மரப் பயிர்களைத் தான் விவசாயிகள் தமது வருமானத்திற்கு நம்பியிருக் கும் நிலையில், அப்படிபட்ட வேர்கள் ஆழமாகப் பூமியினுள் ஊடுருவிச் செல்லும் எந்தவிதமான மரப் பயிர்களையும் குழாய் செல்லும் பாதைக்கு அருகே பயிர் செய்யக் கூடாது என நிபந்தனை விதித்திருக் கிறது, கெயில் நிறுவனம். நிலத்தைக் கையகப்படுத் தும்பொழுதே, அத்தகைய ஒரு இலட்சத்திற்கு அதிக மான மரப் பயிர்களை கெயில் நிறுவனம் அழித்துவிட் டது. மரப் பயிர்கள் மட்டுமின்றி, குழாய் செல்லும் பாதையில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கக் கூடாது; கிணறுகள் இருந்தால் அவை மூடப்படும் என்றும் நிபந்தனை விதித்திருக்கிறது, கெயில்.

விவசாயிகளிடமிருந்து நிலங்களைக் கைப்பற்ற கெயிலுக்குத் துணையாக ஜெயா அரசால் இறக்கிவிடப்பட்ட போலீசு பட்டாளம். (கோப்புப் படம்)



‘‘தனது நிலத்தில் காய்ப்பு கொடுக்கும் 240 தென்னை மரங்கள் இருந்ததில், குழாய் அமைப்பதற்காக 120 தென்னை மரங்களை வெட்டப்பட்டு அழிக்கப்பட்டதையும்; குழாய் செல்லும் பாதையில் இருந்த ஆழ் துளைக் கிணறும் தூர்க்கப்பட்டுவிட்ட தால், மீதமிருந்த தென்னை மரங்களும் போதிய நீர் பாய்ச்ச முடியாமல் அழிந்து போனதையும்’’ வேதனையோடு விவரிக் கிறார், விவசாயி ஒருவர்.

குழாய் செல்லும் பாதைக்கு அருகே வண்டி செல்லும் பாதை அமைக்கக் கூடாது; தண்ணீரை ஒருபுறத்திலிருந்து இன்னொரு புறத்திற்கு எடுத்துச் செல் லும் பாத்திகளை அமைக்கக் கூடாது; நீர்க் குழாய்களைப் பதிக்கக்கூடாதென

*கெயில் விதித்திருக்கும் நிபந்தனைகள், நிலத்தைத் தரிசாகப் போடுவதைத் தவிர வேறுவழியில்லை என்ற நிலைக்கு விவசாயிகளைத் தள்ளியிருக்கிறது நிலத்தின் அனுபோக உரிமையை 99 வருடங்களுக்கு எடுத்துக் கொண்டுள்ள கெயில், அதன் மூலம் இந்த தலைமுறையை மட்டுமல்ல, எதிர்வரும் சந்ததியினரையும் நிலத்திலிருந்து அப்புறப்படுத்திவிட்டது.*

*சமையல் எரிவாயுவைச் சந்தை விலைக்கு வாங்கிக் கொள்ள முன்வர வேண்டும் எனப் பொதுமக்களுக்கு உபதேசிக்கும் அரசு, விவசாயிகளின் நிலத்திற்கு சந்தை மதிப்புபடி நட்ட ஈடு தரவில்லை. மாறாக, நிலத்தின் அனுபோக உரிமையை மட்டுமே எடுத்துக் கொள்கிறோம் என்ற சந்துக்குள் ஒளிந்துகொண்டு, நிலத்தின் வழிகாட்டும் மதிப்பில் வெறும் 10 சதவீதத்தை மட்டுமே விவசாயிகளுக்கு நட்ட ஈடாக அளித்திருக்கிறது. இதன்படி கிருஷ்ணகிரியைச் சேர்ந்த ராஜி என்ற விவசாயிக்குக் கிடைத்த நட்ட ஈடு வெறும் 13 ரூபாய்தான். அடிமாடுகளைக்கூட எந்தவொரு விவசாயியும் இந்த விலைக்கு விற்க முன்வரமாட்டான் எனும் நிலையில் சட்டம், போலீசைக் கொண்டு விவசாயிகளை அச்சுறுத்தி, இந்த அபகரிப்பை நடத்தி முடித்திருக்கிறது, கெயில்.*

*1962-இல் இயற்றப்பட்ட பெட்ரோலியம் மற்றும் தாதுப் பொருட்கள் குழாய் பதிப்புச் சட்டத்தின் கீழ்தான் விவசாய நிலங்கள் கையகப்படுத்தப் பட்டுள்ளன. இச்சட்டம் குழாய் பதிக்கப்பட்டுள்ள*

## ஜெயாவின் கபட நாடகம்

2011-ஆம் ஆண்டு இறுதியில் கொச்சி-பெங்களூரு எரிவாயு குழாய் திட்டத்திற்கு அப்பொழுது மைய ஆட்சியிலிருந்த காங்கிரசு அரசு ஒப்புதல் தந்தவுடனேயே, அதனை எவ்வித மறுப்புமின்றித் தமிழகத்தில் நடைமுறைப்படுத்த ஒப்புக் கொண்டதோடு, 2012 மே மாதத்தில் கெயில் திட்டத்தை ஆதரித்து சட்டமன்றத்திலேயே உரையாற்றினார், ஜெயா. கெயில் நிறுவனத்தின் நிலம் கையகப் படுத்தும் நடவடிக்கைகளை எதிர்த்து நின்ற விவசாயிகளை ஒடுக்குவதற்கு போலீசையும் மாவட்ட நிர்வாகத்தையும் அனுப்பி வைத்தது, அவரது அரசு. நெடுஞ்சாலை ஓரத்தில் எரிவாயுக் குழாய்களைப் பதிப்பது சாத்தியமற்றது; திட்டத்திற்கு எதிராகப் போராடுபவர்களை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார் அன்றைய தலைமைச் செயலர் தேவந்திர நாத் சாரங்கி.

விவசாயிகள் போலீசின் அடக்குமுறைகளுக்கு அஞ்சி ஒடுங்கிப் போய்விடவில்லை. அவர்கள் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகளுக்குத் தடையாணை பெற்றனர். உயர்நீதி மன்ற உத்தரவுக்கு இணங்க சென்னையில் நடத்தப்பட்ட கருத்துக் கேட்பு கூட்டத்தில் விவசாயிகள் கெயிலின் திட்டத்தை நெடுஞ்சாலைக்கு மாற்ற வேண்டும் என்பதில் உறுதியாக நின்றனர். விவசாயிகளின் உறுதியாலும், 2014 நாடாளுமன்றத் தேர்தலில் மேற்கு மாவட்ட விவசாயிகளின் வாக்குகளைப் பெற வேண்டுமென்ற சுயநலத்தாலும் பின்வாங்கிய ஜெயா அரசு, விளைநிலங்களுக்குப் பதிலாக நெடுஞ்சாலை ஓரமாகக் குழாய்களைப் பதிக்குமாறு கெயிலுக்குக் கட்டளையிட்டது. இதனை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் தமிழக அரசின் ஆணையை ரத்து செய்து, குழாய்களை விளைநிலங்களில் பதிக்க கெயிலை அனுமதித்தது உயர்நீதி மன்றம். உயர்நீதி மன்றத்தின் இந்த உத்தரவுக்கு எதிராகத் தமிழக அரசு தொடுத்த வழக்கில்தான் உச்சநீதி மன்றம் கெயிலுக்கு ஆதரவான தீர்ப்பை வழங்கியிருக்கிறது.

உச்சநீதி மன்றத்தில் கெயிலுக்கு எதிராகத் தமிழக அரசு தொடுத்திருந்த மேல்முறையீட்டு வழக்கு இறுதி விசாரணைக்கு வந்த நாளன்று, தமிழக அரசு நியமித்திருந்த மூத்த வழக்குரைஞர் ராகேஷ் திவேதி வாதிடுவதற்கு கோர்ட்டுக்கே வரவில்லை. வக்கீல் வராமல் போனதைத் தமிழக அரசும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணையை ஒத்திவைக்க வேண்டும் எனக் கோருவதற்கு பெரிய வக்கீல் கூட்டத்தையே உச்சநீதி மன்றத்திற்கு அனுப்பி வைத்த ஜெயா, பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்வுரிமை சம்மந்தப்பட்ட வழக்கில் வாதிடுவதற்கு நியமிக்கப்பட்ட வழக்குரைஞர் ஆஜராகாமல் ஒளிந்து கொண்டதைக் கண்டும் காணாமல் விடுகிறார் என்றால், இதனைத் தற்செயலானதாகக் கருத முடியாது. சொத்துக் குவிப்பு வழக்கு தனக்குச் சாதகமாக முடியும் வரை உச்சநீதி மன்றத்தையும், மைய அரசையும் பகைத்துக் கொள்ளக் கூடாதென்ற ஜெயாவின் சுயநலம் இதற்கு காரணமாக இருக்கக் கூடும்.

இப்படி விவசாயிகளின் முதுகில் குத்தியிருக்கும் ஜெயா, உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து சீராய்வு மனு தாக்கல் செய்யப் போவதாக அறிவித்திருக்கிறார். இது, சட்டமன்றத் தேர்தலை மனதில் நிறுத்தி ஜெயாவால் அரங்கேற்றப்படும் இன்னொரு நாடகமே!







விவசாய நிலங்களில் எரிவாயுக் குழாய் பதிக்கப்படுவதை எதிர்த்து தருமபுரி மாவட்டம் ஏலகிரியிலும் (வலது) கேரளாவின் காசர்கோடு பகுதியிலும் விவசாயிகள் நடத்திய முற்றுகைப் போராட்டங்கள். (கோப்புப் படங்கள்)

நிலத்தைப் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிப்பதோடு, குழாய்களுக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டால், அதற்கான பொறுப்பை பட்டாதாரரின் மீது சுமத்தி அவர் மீது கிரிமினல் வழக்கு தொடுக்கும் அதிகாரத்தை கெயிலுக்கு அளிக்கிறது. அவ்வழக்குகளில் விவசாயிதான் தன்னைக் குற்றமற்றவராக நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டும். தவறினால், அவருக்கு இரண்டு ஆண்டுகள் முதல் ஆயுள் தண்டனை வரையும் இச்சட்டத்தின்படி அளிக்க முடியும். இச்சட்டம் குற்றம் சுமத்துபவர்தான் குற்றத்தை நிரூபிக்க வேண்டும் என்ற இயற்கை நீதிக்கு எதிரானது மட்டுமல்ல, தடா, பொடா போன்ற பாசிச சட்டங்களுக்கு இணையானது. இந்தச் சட்டரீதியான அச்சுறுத்தல் வழியாக விவசாயிகளைக் குழாய்களைக் காவல் காக்கும் சம்பளமில்லாத செக்யூரிட்டிகளாக மாற்றிவிட்டது, கெயில்.

• • •

எழுபது சதவீத விவசாயிகளின் ஒப்புதலைப் பெற்ற பிறகுதான் நிலங்களைக் கையகப்படுத்த வேண்டும் எனப் புதிய நிலம் கையகப்படுத்தும் சட்டத்தில் விதி இருந்தாலும், அதனை ஒதுக்கிவைத்துவிட்டு விவசாயிகளின் நிலங்களைக் கையகப்படுத்துவதற்காகவே மைய அரசின் சில சட்டங்களுக்குப் புதிய நிலம் கையகப்படுத்தும் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படி விலக்கு அளிக்கப்பட்ட சட்டங்களுள் ஒன்றுதான் பெட்ரோலியம் மற்றும் தாதுப் பொருட்கள் குழாய் பதிப்பு சட்டம். அதனால் இச்சட்டத்தின் கீழ் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு விவசாயிகளின் ஒப்புதலையும் பெறத் தேவையில்லை; நிலத்தை இழப்பதால் அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைப் பற்றியும் அக்கறை கொள்ளத் தேவையில்லை என்ற சட்டரீதியான ஏற்பாட்டைப் பயன்படுத்திக்கொண்டுதான் தமிழக விவசாயிகளின் நிலத்தின் மீதான உரிமையை மறுத்து தீர்ப்பளித்திருக்கிறது, உச்சநீதி மன்றம்.

''ராமர் பாலத்தின் மீது மைய அரசு கைவைத்தால் எங்களிடம் வாருங்கள்'' என சுப்பிரமணிய சுவாமியின் இந்து உணர்வுக்கு ஆறுதல் கூறியிருக்கும் உச்சநீதிமன்றம், கெயில் வழக்கிலோ விவசாயிகளின் உணர்ச்சி களுக்கு இடங்கொடுப்பது வாக்குவங்கி அரசியல் என எகத்தாளத்தோடு எடுத்தெறிந்து பேசுகிறது.

குழாய் பதிக்கும் பாதையை மாற்றியமைத்தால் இத்திட்டத்திற்காக ஏற்கெனவே செலவழிக்கப்பட்ட 600 கோடி ரூபாய் பாழாகிவிடும் என முதலைக் கண்ணீர் வடிக்கிறது, கெயில். ஆனால், மைய அரசோ சேது சமுத்திர திட்டத்திற்காக ஏற்கெனவே செலவழிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களைப் பற்றியெல்லாம் அக்கறை கொள்ளாமல், அத்திட்டத்தின் பாதையை மாற்றி அமைக்கத் திட்டமிட்டு வருகிறது. உழைக்கும் விவசாயிகளைக் காப்பதைவிட ஒரு அற்பமான மணல் திட்டைக் காப்பதைக் கடமையாகக் கருதும் உச்சநீதி மன்றத்தின், மைய அரசின் இந்து உணர்ச்சி, வாக்கு வங்கி அரசியலைவிட மோசமானது.

மகாராஷ்டிரத்தில் மகாநகர் கேஸ் நிறுவனத்தால் இயக்கப்படும் மஹிம்-தாசிர் எரிவாயு திட்டமும், குஜராத்தில்அதானிநிறுவனத்தால்இயக்கப்படும்அகமதாபாத்-பகோதரா மற்றும் காந்திநகர்-சார்கட்ஜ் எரிவாயு திட்டமும், உத்திரப்பிரதேசத்தில் இந்தியன் ஆயில் நிறுவனம் செயல்படுத்தி வரும் எரிவாயுத் திட்டமும் நெடுஞ்சாலை வழியாகத்தான் எடுத்துச் செல்லப்படுகின்றன. கொச்சி - குட்டநாடு - பெங்களூரு - மங்களூரு எரிவாயுத் திட்டத்தின் முதல் பகுதியான புத்துவைப்பீ-கலமசேரி எரிவாயு குழாய் இணைப்பு கடற்கரை பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. குஜராத்தில் அகமதாபாத்-பரோடா நெடுஞ்சாலையில் 500 கி.மீ.





விவசாய நிலங்களில் பதிக்கப்பட்ட எரிவாயுக் குழாய் வெடித்துச் சிதறியதால் பாதிக்கப்பட்ட ஆந்திராவைச் சேர்ந்த நகரம் கிராமத்தின் ஒரு பகுதி (இடது) மற்றும் உடல் வெந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் அக்கிராமவாசி.

தூரத்திற்கு எரிவாயு குழாய்களை ஓ.என்.ஜி.சி., இந்தியன் ஆயில் உள்ளிட்ட மைய அரசு நிறுவனங்கள் பதித்துள்ளன. உண்மை இவ்வாறிருக்க, எரிவாயுக் குழாய்களை நெடுஞ்சாலையில் பதிப்பது மிகுந்த ஆபத்தானது எனப் பூச்சாண்டி காட்டி வருகிறது, கெயில்.

எரிவாயுவை விளைநிலங்களின் வழியாக எடுத்து வருவது ஆபத்து குறைவானது என்ற கெயிலின் வாதம் சொத்தையானது என்பதை ஆந்திர மாநிலம், கிழக்கு கோதாவரி மாவட்டத்திலுள்ள நகரம் கிராமத்தில் பதிக்கப்பட்ட எரிவாயுக் குழாய்கள் வெடித்துச் சிதறிய விபத்து நிரூபிக்கிறது. இந்த விபத்தில் 18 பேர் இறந்துபோனதோடு, 10 ஏக்கருக்கும் அதிகமான பரப்பு கொண்ட பகுதியில் இருந்த வீடுகள், மரங்கள், பயிர்கள் அனைத்தும் எரிந்து சாம்பலாயின.

விளைநிலங்கள் வழியாக எரிவாயு குழாய்களை எடுத்துச் செல்வதன் பின்னுள்ள நோக்கம் குறைந்த ஆபத்து என்பதல்ல; மாறாக, கெயிலின் இலாபம். நெடுஞ்சாலை வழியாக எடுத்துச் செல்வதென்றால், நிலத்தைக் கையகப்படுத்துவதற்கும், பதிக்கப்பட்ட குழாய்களைத் தொடர்ச்சியாகக் கண்காணிப்பதற்கும், விபத்து ஏற்பட்டால் நட்ட ஈடு வழங்குவதற்கும் அதிக தொகையை முதலீடு செய்ய வேண்டியிருக்கும். விளைநிலங்கள் வழியாக எடுத்துச் செல்வதன் மூலம் தனது இந்தச் சுமைகள் அனைத்தையும் விவசாயிகளின் தலையில் சுமத்திவிட்டு, அதனை நியாயப்படுத்துவதற்குத் தேசிய நலன், தொழிற்சாலை, வேலைவாய்ப்பு, வளர்ச்சி - என விதவிதமான பொய்களைக் கவர்ச்சிகரமான முறையில் அடுக்கிக் கொண்டே போகிறார்கள்.

இந்த எரிவாயுத் திட்டம் நிறைவடைந்தால், உரத் தொழிற்சாலைகளும், மின் உற்பத்தி நிலையங்களும், அவற்றைச் சார்ந்த தொழிற்சாலைகளும் பலனடைவதோடு, வீடுகளுக்கும், தள்ளுவண்டி கடைகளுக்கும் எளிதாக எரிவாயு கிடைக்கும் எனப் படம் காட்டுகிறார்கள், பொருளாதார நிபுணர்கள். உர மானிய வெட்டு, எரிவாயு மானிய வெட்டு, மின்சார மானிய வெட்டு, கூலி வெட்டு என ஒருபுறம் மக்களின் மீது இடியை இறக்கிவிட்டு, இன்னொரு புறம் உரமும், எரிவாயுவும், மின்சாரமும் அபரிதமாகக் கிடைக்கும் எனப் பேசுவது அயோக்கியத்தனமானது.

பொதுத்துறை நிறுவனமான கெயிலின் 30 சதவீதப் பங்குகள் தனியாரின் கைகளில் இருக்கும்நிலையில், அதன் வியாபார நடவடிக்கைகளில் பொது நலன் என ஒன்று இருக்கவே முடியாது. அப்படி பொது நலன் இல்லாத ஒன்றுக்காக விளைநிலங்களைக் கைப்பற்ற முடியாது என்பதற்காகவே, ஒவ்வொரு கார்ப்பரேட் நடவடிக்கையின் மீதும் தேச நலன், வளர்ச்சி என்ற சல்லாத் துணி போர்த்தப்படுகிறது. விவசாயிகளின் உணர்ச்சிகளுக்கு இடங்கொடுக்காத உச்சநீதி மன்ற நீதிபதிகளின் உள்ளத்திலோ கார்ப்பரேட் முதலாளிகளின் விசுவாசம்தான் நிரம்பிக் கிடக்கிறது.

ஆளுங்கும்பலின் இந்த மோசடிகளையெல்லாம் விவசாயிகள் புரிந்துகொண்டு வருகிறார்கள். அதனால்தான், மேற்கு மாவட்ட விவசாயிகள் பெட்ரோலியம் மற்றும் தாதுப் பொருட்கள் குழாய் பதிப்புச் சட்டத்தையே ரத்து செய்ய வேண்டும் எனக் கோருகிறார்கள். இதனைச் சாதிப்பதற்கு விவசாயிகள் தமது சொந்த பலத்தையும் தமிழக மக்களின் ஆதரவையும் பெறுவதைத் தவிர வேறு மாற்று வழி எதுவும் கிடையாது.

• செல்வம்

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

**"மூடு டாஸ்மாக்கை!"**
**- இது,**
**தமிழ்ச் சமூகத்தின்**
**உள்ளக்கிடக்கை.**

மக்கள் அதிகாரம்
சிறப்பு மாநாடு,
பிப். 14, 2016
திருச்சி.




''இனி நாடுதான் எனது மைதானம்!''- வெற்றிச் சான்றிதழ்களைக் கிழித்தெறிகிறார் டேவிட் ராஜ்.



''அப்பாவைக் கெடுத்திட்டியே அம்மா!''
- குழந்தைகளின் இரத்தக் கண்ணீர்.



''என் தந்தை யார், தாய் யாரென அறியாமல்
மயங்கிக் கிடந்தேன்!'' - கரநாதன் நாவேர் நாட்டுக்களரி
கலைக்குழுவினரின் பாடல்.




மையம் குழுவினரின் வீதி நாடகம்.




கேலிச் சித்திரங்கள், ஓவியங்கள்.





அணிஅணியாக மாநாட்டுக்குத் திரளும் உழைக்கும் மக்கள்.

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly)   PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/15-17. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/15-17.

# “மூடு டாஸ்மாக்கை!” - இது, தமிழ்ச் சமூகத்தின் உள்ளக்கிடக்கை.

## மக்கள் அதிகாரம் சிறப்பு மாநாடு, பிப். 14, 2016, திருச்சி.

